# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.


ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
இரா. இளஞ்செழியன், B.A. (Hons.).

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1982 தை 21 — 3—2—51 சனிக்கிழமை | வீச்சு 22


## கடுந்துயரால் வேதனைப் படுகிறான் கைத்தறி நெசவாளி!

★  ★


## வலையற்று வாழ்கின்றனர் சென்னை—டில்லி ஆளவந்தார்கள்!

Best copy available.

# நடமாடும் நியூட்டன்கள்!

[தங்கவேலர்]

பதினேழாம் நூற்றாண்டு! விஞ்ஞான வானிலே விடிவெள்ளிகள் அதிகமாகத் தோன்றாதநேரம்! ஆராய்ச்சியாளர்களென்று கூறப்பட்ட ஒருசில சுயநலமிகள், தாங்கள் எடுத்துச்சொன்ன கருத்தே முடிவானது என்று வாதாடிக் கொண்டிருந்த விபரீத நிலைமை வேகமாக வளர்ந்து கொண்டிருந்த காலம். ராயல் சொஸைட்டி என்ற பெயரிலே ஒரு கழகம் இயங்கிக் கொண்டிருந்தது அப்போது. அந்தக் கழகத்திலேதான் ஆராய்ச்சியாளர்களென்று கூறிக்கொள்பவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். புதுப்புது விஞ்ஞான முறைகளைக் கண்டு அங்கத்தினர்கள் கழகத்திடம் அறிவிப்பதும், அந்த அங்கத்தினர்கள் அறிவித்த கருத்துக்களை ஏடுகளிலே வெளியிட்டு உலகோர்க்கு விளக்குவதுமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தது கழகம். கழகமும் அங்கத்தினர்களும் கொலுவீற்றிருந்தஇடம், இங்கிலாந்து!

ஹூக் என்ற ஒரு பேராசைக்காரன் ஆராய்ச்சியாளர்களில் மிகப் பெருமை வாய்ந்தவனாகக் கருதப்பட்டுவந்தான். யாராவதொரு புதிய விஞ்ஞானி தான் கண்டு பிடித்த புதிய கண்டு பிடிப்பை ராயல் சொஸைட்டியிடம் எடுத்துச் சொல்லும்போது, அந்தப் புதிய கண்டு பிடிப்பையெல்லாம் கேலிக் கூத்தாக்கி, இன்று புதிய விஞ்ஞானி கண்டு பிடித்ததையெல்லாம் தான் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னேயே கண்டு பிடித்து விட்டதாகக் கூறி புதிய விஞ்ஞானி முன்னேறுவதற்கு முட்டுக்கட்டை போடுவான் ஹூக்.

ஹூக் உயிரோடிருக்கும் போது வேறு எந்த விஞ்ஞானியும் புகழப்படுவது அவனுக்கு விருப்பந் தராததொன்று. ஆகவே ஹூக்கின் அறிவையெல்லாம் மிஞ்சி அரும்பு விட்டு வளர்ந்து கொண்டிருந்த புதிய இளம் விஞ்ஞானிகளெல்லாம் ஹூக்கின் கேலிக்குரலுக்கு ஆளாயினர். இளம்விஞ்ஞானிகளின் இதயங்களெல்லாம் தாக்கப்பட்டுக்கொண்டிருந்தன ஹூக்கின் சொல்லம்பால்! புத்தம் புதிய உண்மைகளைக் கண்டு பிடிப்போரின் உள்ளமெல்லாம் குமுறிக்கொண்டிருந்தன ஹூக்கின் கோணல் போக்கைக் கண்டு!...தம்முடைய அற்புதக் கண்டுபிடிப்புகளெல்லாம் நாட்டுக்குப் பயன்படாத முறையிலே ஹூக் அறிவுக்குத் தடைவிதிக்கிறானே என்று வேதனைப் பயணம் நடத்தினர் விவேகிகள்.

அழுது கண்ணீர் வடித்த அந்த ஆயிரமாயிரம் அறிவுச் சிற்பிகளிலே "நியூட்டன்" என்ற புதுமை விரும்பியுமிருந்தான். நியூட்டன் ராயல் சொசைட்டிக்கு அனுப்பிய ஏராளமான விஞ்ஞானக் குறிப்புகளை ஹூக் அலட்சியம் செய்து, நியூட்டன் குறைமதியுடையவனென்றும் ராயல் சொஸைட்டியில் அங்கம் வகிக்க அருகதையற்றவனென்றும் இழித்துக் கூறினான். காலப் போக்கிலே ஹூக் இறந்துவிடவே, நியூட்டன் மீண்டும் தான் எழுதிய விஞ்ஞானக் குறிப்புகளை சொசைட்டிக்கு அனுப்பி வைத்தான். அப்போது அங்கு யாரும் எந்தவிதமான எதிர்ப்பும் காட்டவில்லை—நியூட்டனின் ஆராய்ச்சிக் கருத்துக்களுக்கு நல்லதோர் மதிப்பைத் தந்தது ராயல் சொசைட்டி.

ஹூக்கின் பொறாமை மேகத்தால் மறைக்கப்பட்டிருந்த நியூட்டன் எனும் முழுநிலவு......ஹூக்கின் மறைவுக்குப் பின்னே ஒளி சிந்தி உலகோர் இதயங்களையெல்லாம் கட்டிப் பிடித்திழுத்தது.

கடலிலே உயரஎழும்பிக் குதித்து உருண்டோடி வரும் அலை—எப்படித்தானுண்டாகிறது? அது அப்படி இயங்குவதற்கான சூழ்நிலைதான் என்ன என்பதை அதுவரை எந்த விஞ்ஞானியும் எடுத்துச் சொல்லி விளக்கந்தரவில்லை நியூட்டனைத் தவிர!

சூரிய சந்திரர்களின் ஆகர்ஷணத்தால் கடல் நீரிலே அலைகளுண்டாகின்றன என்ற உண்மை விளக்கத்தை முதல் முதலாக உலகிற்கு எடுத்துரைத்தவன் நியூட்டன்தான். நியூட்டனுக்கும் முன்பு எத்தனையோ விஞ்ஞானிகள் தொலை நோக்கியை (TELESCOPE) கண்டு பிடித்துத்தானிருந்தனர், எனாலும் நியூட்டனின் புதிய தொலை நோக்கியில் முன்னவர்கள் கண்டு பிடித்திருந்த கருவியிலிருந்த குறைபாடுகள் இல்லாமலிருந்ததால் எல்லோரும் நியூட்டனின் தொலை நோக்கியையே பெரிதும் போற்றினர்.

ஒளியைப் பற்றி நியூட்டன்தான் முதல் முதலாக ஆராய்ச்சி செய்தான். சாதாரண வெள்ளைநிற ஒளி ஏழுவர்ணங்களால் ஒன்று சேர்ந்து ஆக்கப்பட்டது. வெண்மையாகக் காட்சி தரும் சூரியஒளி உண்மையில் வானவில்லில் காணப்படும் ஏழு நிறங்களால் ஆக்கப்பட்டதுதான் என்ற ஆராய்ச்சிக்கருத்து அப்போது வாழ்ந்து வந்த புகழ் வாய்ந்த விஞ்ஞானிகளுக்கும் புரியாமல் தானிருந்து வந்தது. ஆனால் இளைஞன் நியூட்டன் இந்தக் கருத்தைத் தெளிவோடு ஆராய்ந்து புரியவைத்தான்.

* * *

நியூட்டன் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ட்ரினிட்டி கல்லூரியிலே கல்வி பயின்றான். தனது 22–வது வயதிலே பி. ஏ. பட்டம் பெற்றான். அவன் பட்டம் பெற்ற அந்த வருடம் கேம்பிரிட்ஜ் நகர வட்டாரத்திலே கொள்ளை நோய் பரவி கல்லூரி பூராவையும் மூடிவிட்டனர். மேல் படிப்புப் படிக்க எண்ணங் கொண்டிருந்த நியூட்டன், இக்காரணத்தால், படிப்பைக், கைவிட்டு, தன் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டி நேரிட்டது. கல்லூரி மூடியதும் ஒரு வழிக்கு நியூட்டன் விஷயத்திலே நலமாகத்தான் முடிந்தது. தனது ஆராய்ச்சி அலைமோதும் உள்ளத்தோடு தன் கிராமத்திலே உலவிக் கொண்டிருந்தபோது ஒரு நாள்... ...ஆப்பிள் பழமொன்று தரையிலே விழுந்து உருண்டோடுவதைக் கண்டான் நியூட்டன். அந்தக்காட்சியைக் கண்ட அவனது ஆராய்ச்சியுள்ளம்...... "ஆப்பிள் ஏன் நேராகக் கீழே விழவேண்டும்?

ஆகாயத்தில் பறந்து மேலே போனால் என்ன? அல்லது பக்கவாட்டில் சென்றால் என்ன?''...... என்ற கேள்வியைப் போட்டுவிட்டு பதிலுக்காகக் காத்து நின்றது.

நியூட்டன் ஆராய்ந்தான்...... ஆராய்ந்தான்......ஆராய்ந்து கொண்டேயிருந்தான்! அதன் பலனாக பூமியின் மேலுள்ள எல்லாப் பொருள்களையும், பூமியின் மத்தியை நோக்கி இழுக்கக் கூடிய ஒருவித ஆற்றல்-ஈர்க்கும் சக்தி—பூமிக்கு இருக்கிறது என்ற விளக்கவுடையைத் தன்னுள்ளத்திலே-பலமுறை பதியவைத்தான். தான் புரிந்துகொண்ட அந்த இழுக்கும் சக்தி உண்மையைத் தன் தோழர்கள் எல்லோரிடமும் கூறிப் புரியவைத்தான்.

1667-ம் வருடம் கொள்ளை நோய் ஒழிந்து அமைதி நிலவியது. மீண்டும் கல்லூரி துவக்கப்பட்டது. நியூட்டனும தன் கிராமத்தைவிட்டு வெளியேறி கல்லூரி வந்தடைந்து எம். ஏ. க்கு படித்துக் கொண்டிருந்தான். ட்ரினிடடி கல்லூரிப் பேராசிரியர் பாரோ (BARROW) போன்ற மேதைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு உரையாடல்கள் நடத்தினான் நியூட்டன் அடிக்கடி! அவன் உரையாடலில் கலந்து கொணடு, தனது ஆராய்ச்சிக் கருத்துக்களை அழகாக எடுத்துச் சொன்னது பாரோவுக்கு மிகவும் பிடித்து விட்டது! பாரோ பேராசைக்காரல்ல சுயநலமி ஹூக்கைப்போல. ஆகவே நியூட்டனின் புதுமை ஆர்வத்தைப் புகழ்ந்து அவன் போக்கிற்கு கல் வாழ்த்துக் கூறிவைத்ததோடு,....... கல்லூரியின் கணிதப் பேராசிரியர் பதவியைவிட்டுத்தான் விலகியபோது, அவர் வகித்து வந்த அந்தப் பேராசிரியர் பதவியை நியூட்டனே வகிக்க வேண்டுமென்று சிபார்சும் செய்தார்.

அப்போது நியூட்டனும் எம். ஏ. படித்து முடித்திருந்தான். பாரோவின் அன்பு வேண்டுகோளின்படி அவர்விட்டுச் சென்ற பதவியிலேயே அமர்ந்து கணிதப் பேராசிரியராகப் பணியாற்றத் துவங்கினான். அவன் அப்பதவியை ஏற்றுக் கொண்டபோது 26 வயது தான் முடிந்திருந்தது அவனுக்கு.

கல்லூரியிலே கணிதம் போதிப்பதைத் தவிர வேறு வேலை இல்லை. அதுவும் வாரத்திலே சிலமணி நேரங்கள்தான் அதற்கென ஒதுக்கப்பட்டிருந்தன, ஓய்வுக் காலம் அதிகமாக இருந்தது நியூட்டனுக்கு. இந்த நிலையிலே அவன் ஆராய்ச்சி உள்ளமும் சும்மா கிடக்கவில்லை, ஏதாவது புதிய புதிய செய்திகளைக் கண்டு பிடித்து உலகுக்கு அறிவிக்க விரும்பினான். ஆகவே, தான் தங்கியிருந்த விடுதியிலேயே தனியாக ஒரு அறையை ஏற்படுத்திக் கொண்டு—அதை ஆராய்ச்சி சாலையாக்கி வைத்தான்' விஞ்ஞானக் கருவிகளுக்கு வேண்டிய கண்ணாடி வில்லைகளை (LENS) முதன் முதலாக அந்தத் தனது தனி அறையில் அமர்ந்துதான் செய்தான். அந்த அறை அவனுக்கு எவ்வளவோ அமைதியை அளித்தது.

கல்லூரியிலிருந்த மற்ற பேராசிரியர்களும், மாணவர்களும் கேளிக்கைகளிலே மூழ்கிக்கிடக்கும் நேரங்களிலே...... நியூட்டன் மட்டும் தனியாக தன் அறையிலேயிருந்து கொண்டு ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருப்பானும். தனது தேவைக்கு அதிகமான பணம் ஊதியமாக வந்துகொண்டிருந்தது. தானோ இளமை உள்ளத்தோடு உலவிக்கொண்டிருந்தான். இதயத்திலே இன்ப அலைகள் மோதிக் கொண்டிருக்கும் பருவம். அவன் விரும்பியிருந்தால் தனது பணத்தையும் பருவத்தையும் முன்வைத்துப்பால்ய லீலைகள் நடத்திக்காட்டியிருக்கமுடியும். இதையெல்லாம் மனதிலும் எண்ணிப்பார்க்கவில்லை அந்தஊருக்கு உழைத்த உத்தமன். பணம், பருவம், சிங்காரசசேட்டைகள் எல்லாவற்றையும் ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்துவிட்டு—ஒரு வேளை உணவருந்தியும் மறுவேளை பட்டினி கிடந்தும் இரவு பகலாகக் கண்விழித்து ஆராய்ந்தான். பூமியின் தன்மை என்ன? கடலிலே அலையுண்டாவது ஏன்? சந்திர மண்டலத்தின் அற்புதங்கள் தான் என்னென்ன? வானத்துக்கோளங்களிடையே ஆகர்ஷிக்கும் சக்தி உண்டா? உலகம் சுத்தமான உருண்டையாக இல்லாமல் துருவங்களுக்கருகில் தட்டையாகவும், பூமத்ய ரேகையை ஒட்டிந்துருத்திக் கொண்டும், ஒரு ஆரஞ்சுப்பழத்தைப்போல இருப்பானேன்—இதற்குசரியான விளக்கம்தானென்ன?............என்பவைபோன்ற விளக்கமற்றிருந்த நிலைமைக்கெல்லாம் விடை கண்டு உலகோர்க்கு எடுத்துரைத்தான்.

இந்த உயர்ந்த கருத்துக்களைதான்—ஏடுகளிலே வெளியிடமறுத்தான் ஹூக்! ஹூக் வெளியிடமறுத்த அந்த ஆராய்ச்சிக்கட்டுரைகளையெல்லாம் திரட்டித்தொகுத்து............"பிரின்ஸிபியா" (Principia) என்னும் பெயரில பெரியதோர் புத்தகமாக நியூட்டனே வெளியிட்டான். அந்தபுத்தகம் முதன்முதலாக 1689ம் ஆண்டின் மத்தியில் வெளியிடப்பட்டது. அப்போது 200பிரதிகள் தான் அச்சடித்து வெளியிட்டான். அதன் பிறகு 26 வருடங்களுக்குப் பிறகுதான் இரண்டாவது பதிப்பு வெளிவந்தது. அவ்வளவு மந்தம் "பிரின்ஸிபியா" விற்பனையாவதிலே! பிரான்ஸ், இத்தாலிபோன்ற நாடுகளிலெல்லாம் நியூட்டனின் புகழ்பரவியிருந்தது. அப்போது, என்றாலும் அவன் வெளியிட்ட பிரின்ஸிபியாவைப் படித்துணர்ந்து அறிவுதெளிவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அப்போது வாழ்ந்த பெரும்பகுதி மக்கள் எண்ணவில்லை.

பிரின்ஸிபியா வெளியான அதே வருடம் அதாவது 1689ல் சர்வகலாசாலைக் தொகுதிக்கு பார்லிமெண்ட் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான் நியூட்டன். அரசியலிலே அவன் பெயரளவிலே தான் பங்கெடுத்துக் கொண்டானே தவிர......................இது இன்ன திட்டம், இதை இன்ன முறையிலே சட்டமாக்கவேண்டுமென்று ஒரு தடவையாவது சட்டசபையிலே நியூட்டன் குரலெடுத்தது கிடையாதாம். ஏறத்தாழ இன்றைய நம் ராஜ்ய சர்க்கார் பிரதிநிதிகள் மத்திய அரசியல் அறையிலே பேசாத பதுமைகளாக அமர்ந்திருக்கிறார்களே அது போலவே நியூட்டன் அரசியலிலே சிரத்தையின்றி அங்கம் வகித்துக் கொண்டிருந்தான்.

வேடிக்கையாகக் கூடக் கூறுவார்கள் நியூட்டனைப்பற்றி......... ஒரே ஒருமுறைதான் அவன்பதவிக் காலத்திலேயே சட்டசபையில் பேசினாராம், அந்தப் பேச்சும் எதைப் பற்றித் தெரியுமா? ஒருமுறை சபைக் கதவு திறந்திருப்பதை வேலைக்காரனிடம் அறிவித்து கதவைச்சாத்தும்படி கூறினாராம். இதுதான் நியூட்டன் சட்

டசபையிலேயே எழுந்துபேசிய முதலும் முடிவுமான பேச்சாம்.

அரசியலிலே அவன் எண்ணம் நிலைத்துத் தங்கவேயில்லை. ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று துடித்துக்கொண்டு தனிமையையே விரும்பினான். தனது ஆழ்ந்தகழுடிவுக்குப்பின் தனது ஆராய்ச்சிசெய்திகளை உலகிற்கு அறிவித்துக்கொண்டிருப்பதிலேதான் தணியாத தாகம் நியூட்டனுக்கு! ஆராய்ச்சி என்றால் நியூட்டன் தன்னை மறந்து விடுவான் சூழ்ந்துள்ள அத்தனை காட்சிகளையும் மறந்து விடுவான். எங்கெங்கோ எட்டாத தூரத்திலே கண்சிமிட்டும் விண்மீன்களோடு உறவு பேசுவான். அதன் தன்மைகளை அறிந்துகொள்வதிலே படாதபாடு படுவான்.

ஒரு வேளை சிறகடித்து அவன் சிந்தனை அவனிடம் பறந்துவந்தால் போச்சு! இல்லையேல் போட்ட சாமான் போட்ட இடத்திலேயே கிடக்க அப்படியே அமர்ந்திருப்பானாம்.

ஒரு தடவை நியூட்டனுக்கென வைத்திருந்த ஆகாரத்தை வேடிக்கைக்காக அவனுடைய நண்பனொருவன் நியூட்டன் வருமுன்னதாகத்தின்றுவிட்டு, காலித்தட்டை நன்றாக மூடிவைத்துவிட்டானாம். சோதனைக்கூடத்திலிருந்து சற்று நேரங்கழித்து உணவருந்த வந்த நியூட்டன், தட்டின் மூடியைத் திறந்து பார்த்தானாம். அதுகாலியாயிருப்பதைக்கண்டதும், "அடே, நான் சாப்பிட்டுவிட்டேன் என்பதை மறந்து போனேனே!" என்று சொல்லித்திரும்பி ஆராய்ச்சி கூடத்துக்கே சென்றானாம்.

அவன் நண்பர்கள் இந்தச் சம்பவத்தையே அடிக்கடி எண்ணி நியூட்டனைப்பற்றிச் சிரித்துக்கதை பேசுவார்களாம் பைத்தியம் என்று கூட அவர்களில் சிலர் பரிகசித்தார்களாம்.

அவர்கள் பரிகசித்தது என்னவோ உண்மையாகத்தான் போய்விட்டது. நியூட்டனின் தீவிர ஆராய்ச்சிப் போக்கினால் ஒரு சமயம் நியூட்டனுக்கு மூளைக்கோளாறு உண்மையிலேயே ஏற்பட்டுவிட்டது!

எவ்வளவோ உயர்தரமான சிகிச்சைக்குப்பிறகு 1693ம் வருடம் நியூட்டன் மூளைக்கோளாறிலிருந்து விடுபட்டுத்தேறிக்கொண்டிருந்தான். அதற்கும் பிறகு பல ஆண்டுகளாகியதாம் நியூட்டன் எழுதிய 'பிரின்ஸிபியா' வை அவனே படித்துப்புரிந்துகொள்வதற்கு! ஒருவழியாக மூளைக்கோளாறிலிருந்து முற்றும் விடுபட்டுப் புதிய மனிதனானான் நியூட்டன்.

பத்து வருடங்களுக்குப் பிறகு 1703ல் ராயல் சொஸைட்டிக்குத் தலைவனைத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அதற்கும் அடுத்தவருடம் ஒளிபற்றிய அவனது புதிய புத்தகம் ராயல் சொஸைட்டியால் வெளியிடப்பட்டது. 1705ல இங்கிலாந்து அரசி ஆன் (Anne), நியூட்டனுக்கு 'சர்' பட்டம் அளித்துக் கௌரவித்தாள்.

இந்தக் கௌரவமெல்லாம் நியூட்டனுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. புதிய கண்டுபிடிப்புகளிலேயே அவன் எண்ணம் மின்னிட்டுக்கொண்டிருந்தது. தான் கண்டுபிடித்ததெல்லாம் ஒரு சிறு அளவுதான்........இன்னும் கண்டுபிடிக்கப்படவேண்டியது எவ்வளவு எவ்வளவோ என்று மூக்கில் விரலை வைப்பானாம். இந்த நிலைமையை நியூட்டனே ஒரு இடத்தில் விளக்குகிறான், " உண்மை என்னும் கரையற்றகடல் என்முன் இன்னும் ஆராயப்படாமல் இருக்கும் போது, நான் கடற்கரையில் விளையாடிக்கொண்டு அங்கு மிங்கும் கிடக்கின்ற ஒரு அபூர்வ சங்கு அல்லது அழகிய கூழாங்கல்லைப் பொறுக்கும் சிறு குழந்தையைப் போல உள்ளேன்" என்று கூறி தனக்கிருந்த புதுமைக் கண்டுபிடிப்பு ஆர்வத்தை விளக்குகிறான்.

தனது 85 வது வயதிலே உயிர் துறந்தான் நியூட்டன். சிவப்படாத சிகை, சிரித்துப்பேசும் உதடுகள், சாதாரண அளவுக்கும் சிறிது மட்டமான உயரம்......இந்த உருவத்தோடு உலவிய நியூட்டன் 1728-ம் வருடத்தோடு மறைந்துவிட்டான் மரணப்போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு! ஆனால் அவனது கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றும் நம்முன்னே "நடமாடும் நியூட்டன்" களாகக் காட்சி தருகின்றன—இன்றும்!

# தோழியர் சத்தியவாணிமுத்துவின் வீரமுழக்கம்



21—1—51 ஞாயிறன்று சென்னையில் நடைபெற்ற திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத் துவக்கவிழாவில், **தோழியர் சத்தியவாணிமுத்து** அவர்கள், ஆதிக்க வாதிகளால் திராவிட சமுதாயத்துக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை எதிர்த்து வீர முழக்கம் புரியும் அரிய காட்சி! விழாத் தலைவர் **தோழியர் ஆதிலட்சுமி அம்மையார்**, பழம் பெரும் வீராங்கனை **தோழியர் மூவாலூர் இராமாமிர்தம்** ஆகியோரையும் படத்தில் காணலாம்.

வாழ்க்கை விளக்கம்

# ★ மில் கதவு ★

(தேவநகர் இளஞ்சேரன்)

காரிருள். கரிய மேகத்திரையை விலக்கிவிட்டு விண்ணில் முழு நிலவு கோலம் காட்டிற்று. விண் மீன்கள் மின்னுவதன் மூலம் ஏதோ எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தன. இரவின் இன்ப அமைதியை அழிக்க முயன்ற ஆந்தைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அலறிக் கொண்டிருந்தன.

இரவு மணி பத்தாகியும் உறக்கமில்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார் சந்தான சர்மா. நீலவானத்தையோ, நிலவொளியையோ, எதிரே இருக்கும் இள மரக்காவையோ, அதில் பூத்துக் குலுங்கும் பூக்களின் அழகையோ, பூக்களின் மணத்தைத் தூக்கி வரும் தென்றலைப் பற்றியோ நினைத்து மகிழ நேரமேது அவருக்கு? அவர் இதயத்தில் கரைகாண முடியாத துக்கம் தேங்கி நின்றது. இதயத்தின் அடித்தளத்திலிருந்து அடுக்கடுக்காகப் பீறிட்டுவெளிவந்த பெருமூச்சுக்கள் அப்படித்தான் விளம்பரப்படுத்தின. அவர் கவலைக்குக் காரணம்......?

'சாணக்கியா மில், மனுபுரியின் மத்தியில் அழகுற அமைக்கப்பட்டு விளங்குவது. கண்ணைக் கவரும் வண்ண ஆடைகள் குவியல் குவியலாக அங்கு உற்பத்தி செய்யப்பட்டன. இரண்டாயிரம் தொழிலாளர்கள் தங்கள் வயிற்றுப் பிரச்னையைத் தீர்க்க அங்குதான் அடைக்கலம் புகுந்திருந்தனர். 'சாணக்கியா மில்'லின் ஏகபோக உரிமை சர்மாவினுடையதுதான்.

சர்மா, பெரிய பணக்காரர். பழக்கப்பட்ட மொழியில் சொல்வதென்றால் அவர்ஒரு 'கோடீஸ்வரர்' செல்வச் சீமான். தேசிய இயக்கத்தில் கலந்து கொண்டு ஏழை மக்களின் நலனுக்காக நாளும் உழைப்பவர் எனப் புகழ்மாலை சூட்டப்பட்டவர். இருப்பினும் அந்தப் பாழும் வேலை நிறுத்தம் அவர் மில்லையும் எட்டிப் பிடித்து விட்டது!

ஓயாது கேட்டுக் கொண்டிருக்கும 'சாணக்கியா மில்'லின் 'கட—கடா...குடு—குடு' ஒலி ஒரு யாதமாகவே ஓய்ந்து விட்டது. அந்த இயந்திரங்களைச் சுழல வைத்துக் கொண்டிருந்த 'எலும்புக் கூடுகள்' கூலியைக் கூட்டித்தர வேண்டுமென்ற காரணத்தைக் காட்டி வேலை நிறுத்தம் செய்துவிட்டன.

சர்மாவின் நெஞ்சம் துக்கத்தால் கனத்தது, நாட்கள் நகருகின்றன. துணியின் விலையோ விஷம் போல் ஏறிக்கொண்டே இருக்கிறது. நூற்குவியல், துணிக்குவியலாக மாறியாக வேண்டும். ஆனால் தொழிலிலோ தேக்க நிலை பிறந்து விட்டது, ஏன் முடங்கியே விட்டது. பாடுபடுவோர் வர மறுக்கின்றனர். கூலியைக் கூட்டித் தரவோ மனமில்லை. வேறு ஆட்களைக் கொண்டு வரலாமென்றாலோ வேலன் வேறு மிரட்டுகிறான்......?

வேலன்—ஆமாம், பாவி அவனால் விளைந்ததுதான் இந்த வேலை நிறுத்தம். சர்மாவின் நெஞ்சம் கொதித்தது. அந்தக் கொதிப்புக் கிடையே, நடந்துபோன நிகழ்ச்சியொன்றில் அவர் நினைவு சென்று பதிந்தது.

மில் கதவோரத்திலே, அணிவகுத்து நின்று கொண்டிருந்தது அந்த அன்றுடங் காய்ச்சிகள் கும்பல், அன்னக் காவடிகள் கூட்டம். உழைத்து, உழைத்து ஓடெனத் தேய்ந்த அந்தக் கூட்டத்திற்கிடை அவன் — ஆம்......வேலன் தான் பேசினான்......இல்லை முழக்கினான்.

"கள்ளமின்றி உழைக்கிறோம். உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டுகிறோம். உடல் சோர, உள்ளம் வாட இயந்திரத்தோடு இயந்திரமாகச் சுழன்று உழைப்பின் பயனை எஜமானருக்குக் கொடுத்துவிட்டு நியாயமான கூலியைத்தான் வேண்டுகிறோம்...தவறு இது......?

"உழைத்துக் கொடுக்க எவ்வளவு உரிமை நமக்கு இருக்கிறதோ அவ்வளவு உரிமை நம் உரிமையைக் கேட்கவும் இருக்கிறது. ஒடுங்கிய கண்கள் சிந்தும் கண்ணீர்த் துளிகளைக் காட்டி, ஒட்டிய வயிற்றைக் காட்டி...நம் நீதிக்குப் பாடுபடுவோம், வாரீர்.

"பணிந்து கேட்போம். தேவையானால் மண்டியிட்டுக் கேட்போம். உயர்வான கூலிகிடைத்தால் உழைப்போம்......இன்றேல் மறுப்போம்.

"வாருங்கள்......வாருங்கள்...... வறுமையின் பிரதிநிதிகளே வாருங்கள்"

வேலனின் இவ் வேகப்பேச்சு வேதனையால் நொறுங்கிப் போன அந்தப் பாட்டாளிகளின் உள்ளத்திலே சென்று படிந்துவிட்டது. நீதியையும் நேர்மையையும் வேண்டி அந்த உழைப்போர் கூட்டம் நகர்ந்தது. சர்மா அவர்களுக்களித்த பதில்......

"இரண்டு ரூபாயை உங்களுக்குக் கூட்டிக் கொடுத்து விட்டால் என் தொழில் என்ன ஆகிறது......

"இந்த வேலன் பேச்சைக் கேட்டுகிட்டு வீண் வம்பு வேண்டாண்டா, போய் ஒழுங்காகச்செய்யுங்கடா வேலையை"—அவ்வளவுதான் அவர் பேசியது. மேட்டுக்குடியினரின் பேச்சு என்றும் நீண்டு வளர்வதில்லை.

சிந்தனை அலைகளில் மூழ்கிப் போயிருந்த சர்மாவின் கவனத்தை, ஒரு முறை ஒலித்துக் கலைத்தது சுவரில் மாட்டியிருந்த மணிப்பொறி.

வேலன்—ஆமாம் அவனைத் தொலைத்துவிட்டால் அந்தக் கூட்டத்தின் முதுகெலும்பை முறித்தது போலத்தான். ஆனால் அவனைத் தொலைப்பதற்கு வழி.........? சர்மாவின் சிந்தனை மீண்டும் சுழன்றது. அந்த சுழற்சியில் குலப் பெரியோர்களான சாணக்கியர்கள்..கங்குபட்டார்கள்..மனுமாந்தாதாக்கள்...வந்தனர் — சிரித்தனர் —மறைந்தனர். இறுதியில்...ஒரு

நல்ல முடிவு கிடைத்து விட்டது சந்தான சர்மாவுக்கு.

விடிந்தது. வேலனைத் தேடி சர்மாவிடமிருந்து ஆள் பறந்தது. கோரிக்கை வெற்றி பெறப் போகிறது என்ற நம்பிக்கையோடு வந்து சேர்ந்தான் வேலன்.

"வேலா உன்னை எதற்கழைத்தேன் தெரியுமா"—வழக்கத்திற்கு மாறாகப் பரிவையும், பாசத்தையும் குரலிலே கொஞ்சம் கூட்டிக் கொண்டார் சர்மா. ஆனால் உள்ளத்திலே பகைமையுணர்ச்சி புகைந்து கொண்டுதான் இருந்தது.

"சாயந்திரம் ஆறு மணிக்கா, ஆத்துக்கு வந்துடு......கூலியைக் கூட்டித் தர்றதப் பத்தி யோசனை செய்யலாம்"—சர்மா வேண்டினார் உருக்கமாக வேலனை! மகிழ்ச்சியால் துள்ளும் இதயத்தோடு தலையசைத்தான் வேலன்.

ஆவலோடு எதிர் நோக்கிய அந்த ஆறாவது மணியும் வந்தது.

"ஐய்யா!"—வேலன் கூவினான்

"........"

உள்ளிருந்து ஒரு குரல் வீணை நாதமென ஒலித்தது.

"யாரது...வேலனா?"—கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள் அபிராமி. அபிராமியைக் கண்டதும் காரணமில்லாமலே ஒரு குலுக்கு குலுங்கியது வேலனின் இதயம். உடலில் பொங்கிய வியர்வைத் துளிகளை மேல் துண்டினால் துடைத்துவிட்டு நிமிர்ந்தான், அபிராமி தன் அகன்ற விழிகளால் அவனை விழுங்கிக் கொண்டிருந்தாள்.

வாய் குழற "அவர்...இல்லையா" என்றான் வேலன். "வந்து விடுவார் வேலா: வாயேன் உள்ளே"—அபிராமியின் குரல் குழைந்து போவதை வேலனால் உணர முடிந்தது.

அவன் காரணமில்லாமல் நடுங்கினான். "இல்லை" என்ற சொல் உதடுவரை வந்த பிறகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். "இருக்கட்டும்......வா, வேலா"—உணர்ச்சியால் நடுங்கும் வேலனின் கரங்களைத் தொட்டு அழைத்துச் சென்றாள் அபிராமி, உள்ளே.

அபிராமி—சர்மாவின் ஒரே மகள். அவள் செந்நிற முகத்திலே சுழலும் கருவிகள்—காமக்கலை சொல்லும் கல்லூரிகள். பொன்னிற அதரங்கள்—நச்சுக் கோப்பையின் வழவழப்பான விளிம்புகள். அவள் வேலனைக் காதலித்தாள். இல்லை......காதலிப்பது போலப்பாவனை செய்யப்பணிக்கப்பட்டாள். எல்லாம் சர்மாவின் முன்னேற்பாடு— அற்புதமான அறிவுத் திட்டம்—திட்டம் வெற்றிகரமாகவே வேலை செய்தது.

"ஐய்யய்யோ, அக்ரமம்...கேட்பாரில்லையா"—என்ற குரல் வெளியில் கேட்பதற்கும், சர்மா ஸப் இன்ஸ்பெக்டர் சங்கரலிங்கத்தோடு வீட்டுப் படியேறுவதற்கும் சரியாக இருந்தது.

"ஏழைத் தொழிலாளர்களைத் தவறான முறையில் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியதாவும், எஜமானரின் வீட்டில் நுழைந்து அவர் மகளைக் கற்பழிக்க முயன்றதாகவும்"—குற்றப் பத்திரிகை படித்து......இரண்டாண்டு சிறைவாசத்தையும், வேலனுக்குக் கொடுத்து—நீதி அழிந்து போகாவாறு பாதுகாத்தனர் கருணை உள்ளம் படைத்த சர்க்கார்.

"துரோகி"

"காமுகன்"


"நம்பியவர் வயிற்றிலே மண்ணைப் போட்ட உலுத்தன்"—

உண்மையை உணராத அந்தப் பரிதாபத்திற்குரிய பாட்டாளிகள் கூட்டம், வேலனை வாழ்த்தியது இப்படி.

வெற்றிக் களிப்பிலே மிதந்தார் சர்மா. ஆனந்தத்தால் துள்ளினள் அபிராமி. சர்மாவால் முடியாததைத்தான் சாதித்து விட்டதிலே தனிப்பெருமை அவளுக்கு! காரணம்........அன்று வரை அடைத்துக் கிடந்த சாணக்கியா மில்லின் கதவு, அந்த அன்னக் காவடிகள் கூட்டத்திற்காக மீண்டு மொரு முறை திறந்து கொண்டதுதான்!

---

## அறப்போர்க் களத்தில் திராவிட மாதர்கள்!



திராவிட நாட்டுப் பிரிவினைப் போராட்டத்திற்கான அண வகுப்பில் முதல் வரிசையில் இருக்கும் பேற்றினை எங்கட்கு அள யுங்கள் என்று கேட்பதுபோல, திராவிட மாதர்கள் திரண குழுமி, சென்னையில், சென்ற கிழமை, "திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்" அமைத்தனர். சிறப்புற நடைபெற்ற அ கழகத் துவக்க விழாவில் ஈண்டியுள்ள பெண்கள் கூட்டத்தில் ஒ பகுதி இது.

# அங்கே அப்படி! இங்கே இப்படி!!

[தில்லை அறிவழகன்]

அந்த நால்வரும் கண் இமை
கொட்டாமல் அந்தச் சிறு பையனை
நோக்கிக் கொண்டிருந்தனர். அவ
னுடைய கண்கள் மூடியிருந்தன.
முகம் சோபை இழந்திருந்தது.
அவன் உயிரற்ற பிணம் போல்
ன் கிடந்தான். அவன் காலில்
ரு காயம் காணப்பட்டது. அதன்
மேல் ஒரு மெல்லிய துணி கட்டப்
பட்டிருந்தது. அந்த நால்வரும்
ருவர் முகத்தை ஒருவர் பார்த்த
ர்.

ஒருவர் முகத்திலும் ஈயாட
வில்லை. முதியவரும் இளைஞரும்
ற்ற நடுத்தர வயதுள்ள ஒருவர்
ந்தனையில் ஆழ்ந்திருப்பது நன்கு
த் தெரிந்தது. அவருடைய சிறு
டியைப் பிடுங்கி விடுவனபோலப்
த்துக் கொண்டிருந்தன அவர்
கள்.

வேகமாகச் சென்றார். அங்கொரு
த்தைப் பார்த்தார். இங்
ரு ஏட்டைப் புரட்டினார்.
'டெஸ்ட்டூபில்' சில திரவங்களை
ற்றினார். திருப்தியின்றி அவை
ச் சாக்கடையில் கொட்டினார்.
படியும் பையனிடம் வந்தார்.
ர் முகம் பயத்தால் சிவந்தது.
கள் நீர் கசிவதுபோல் தென்
டன.

"ஏன் இதைச் செய்தோம்?"
பதுபோல பலதடவை நெற்றி
த் தடவினார்.

"ஒரு பாவமும் அற்ற பையன்
மருந்து கொடுத்த பிறகா
க்கவேண்டும்?"

அவர் உள்ளத் துடிப்பு அவரு
ய உதடுகளில் தென்பட்டது!
பிள்ளை பிழைத்து விடுமா
று கேட்பதுபோல அந்தத்தாய்
ரை ஏறிட்டுப் பார்த்தாள்.
ர்த்துத்தான் சொல்ல வேண்
ஆனாலும் பயப்படாதீர்கள்!"
று தைரியமூட்ட முயன்றார்,
வர் வைத்தியரோ என்றால் அப்
முழுதும் சொல்லிவிட முடி
. வரை ஒரு இரசாயன
ஞானி என்றுதான் கூற
ண்டும்.

த விரோதி"

"நோயைத் தீர்க்க மருந்து தருவதாகக் கூறி ஊரை ஏய்க்கும் மாயக்காரன்."

"நாஸ்திகன்..."

"எதையும் மறுப்பவன்"

......இப்படி யெல்லாம் பழிச்சொல் கூறும மக்களும், மத குருமார்களும் அந்தப் பையன் இறந்து விட்டால் இன்னும் என்னென்ன புன்சொற்களை வீசுவார்களோ? அந்தச் சொறகளுக்கு அவர் அஞ்சுபவரல்ல. ஆனாலும் அஞ்சாதவரையும் அஞ்சவைக்கும், பயங்கரவாதிகளைக் கொண்ட உலகமல்லவா இது?

அன்று அவர் சொன்ன அதே பதில் இன்றும் அவர் மனத்திரை முன் வந்து நின்றது.

"நான் செய்யும் காரியத்தில், ஆராய்ச்சியில், மதமோ, தத்துவார்த்தமோ, ஆஸ்திகமோ, நாஸ்திகமோ, ஆத்மார்த்தமோ எதுவுமில்லை. ஒரு விஞ்ஞானிக்கு இவைகள் கொஞ்சம்கூட சம்பந்தப் பட்டதோ, தேவையானதோ கூட அல்ல.

எது உண்மை என்பதை அறியத்தான் நான் முயற்சிக்கிறேன், கஷ்டப்படுகிறேன். நான் அந்த உண்மைகளைப் பாடுபட்டுக் கண்டு பிடிப்பதின் நோக்கம் மக்கள் நலம் பெறத்தான்....."

அவர் இந்தப் பதிலை, அந்தப் பையன் இறந்துவிட்ட பின்னும் கூறலாம். ஆனால் மக்கள் உயிர்ச் சொற்களைக்கவனிப்பதைவிட உயிரற்ற பிணத்தைத் தானே கூர்ந்து கவனித்துக் கோபம் கொள்வார்கள்!

இப்படி யெல்லாம் நினைத்து அஞ்சிதான், தான் கண்ட அந்த அருமை நாய்க்கடி மருந்தை அவன் உடலில் ஏற்றினார். அந்த மருந்தை அவன் உடலில் ஏற்றா விட்டாலும் நிச்சயம் இறக்கப்போகிறவன் தான். ஆனாலும் மருந்து ஏற்றிய பின் இறந்தால் ஊர் வாய் சும்மா இருக்காதே!

எப்படியோ பையன் பிழைத்துக் கொண்டான்!

இந்த நிகழ்ச்சி, வைத்திய விஞ்ஞானி பாஸ்டியூரின் வரலாற்றில் ஒரு பகுதி.

இங்கே, சென்ற திங்கள் தீராத வினைகளெல்லாம் தீர்த்து வைப்பேன் என்று கூறி பத்தாயிரக் கணக்கானவர்களுக்கு ஒரு பாபா மருந்து தந்தான்.

ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர்.

ஆனாலும் மருந்து தந்து கொண்டிருந்தான் பாபா! துடித்தானில்லை! அழுதானில்லை! சிந்தித்தானில்லை!

ஒரு உயிர் போய் விடுமோ என்பதற்காக விஞ்ஞானி பாஸ்டியூர் துடித்தார், பிரான்சில்

பாபா மருந்தின் பெருமையைப் பேசினான், ஒரிஸ்ஸாவில்.

பிரான்ஸிலே அந்தக் காட்சி!

இங்கே இந்தக் காட்சி!

அப்பப்பா! எவ்வளவு வித்தியாசம்?

உலக வரலாற்றைப் புரட்டினால் இந்த இரண்டு காட்சிகளும்தான் நம் முன்னே வந்து நிற்கும். நல்லது தரவந்த விஞ்ஞானத்தைஏற்க மறுத்த மக்கள் கூட்டம் ஒரு பக்கம்.

மௌடீகத்துக்கு ஆட்பட்டு மத குருக்களிடமும், மந்திரவாதிகளின் கோல்களிடமும், மாயஜாலக்காரர்களின் பேச்சிலேயும் மயங்கி சீரழிந்த மக்கள் கூட்டம் ஒரு பக்கமும் நிற்கும்.

மக்களை உய்விக்க வந்த விஞ்ஞானிகள், தொல்லையும், துயரும்பட்ட நேரத்தில், மதவாதிகள் மாயாவுலக வாதம் பேசி மக்களை சவக்குழி நோக்கி அழைத்துச் சென்றனர். வரப் பயந்தவர்களுக்கு, மறுத்தவர்களுக்கு முன்னோர் சென்ற காற்சுவடிகளைக் காட்டினர். மறுக்க மனமின்றி நடந்தோர் மடிந்தனர்!

பாஸ்டியூரின் இடையறு உழைப்பாலும், ஆராய்ச்சியாலும், அம்மைக் குத்துவது ஊசி போடுவது போன்ற முறைகள் தோன்றி, கோடிக்கணக்கான மக்களை

(13-ம் பக்கம்பார்க்க)

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 தை 21<br>3—2—51 சனிக்கிழமை | வீச்சு 22 |
|---|---|---|


# "மேஜைத் துணியைப் பாருங்கோ!"

அறிவின் சிகரம் என்று ஆரிய வட்டாரத்தால் ஆநந்தத்துடன் அழைக்கப்படும் 'ஆற்றல் வீரர்' ஆச்சாரியாரைத் தமிழ்நாட்டு அரசியல் உலகை விட்டே விரட்டியடித்துத் தனிப்பெருமை பெற்ற தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தளபதி தான் காமராஜர். — ஆனால் அவர் தான், ஜனவரி 23ம் நாள் மாலை, சென்னையில், செயின்ட்மேரி மண்டபத்தில், குனிந்த தலை குனிந்தபடி இருக்க வேண்டிய அவமான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்!

அஞ்சா நெஞ்சமும் அசையா உறுதியும் படைத்த அறப்போர்த் தலைவர் என்று ஆந்திர காங்கிரஸ் வட்டாரத்தில் அனுதினமும் 'அர்ச்சிக்கப்படும்' அரும்பெரும் சிறப்புப் படைத்த மாபெரும் காங்கிரஸ் தலைவர்தான் ஸ்ரீஜத் பிரகாசம்! — ஆனால் அவரும்தான் அன்பர் காமராஜரைப் போலவே அதே நாளில் அதே இடத்தில், கண்களில் நீர் ததும்ப, முகத்தில் துக்கம் சதிராட, உள்ளத்தை வேதனை வாட்ட வாட்ட, அவமானத்தின் சின்னமாக வீற்றிருக்க நேரிட்டு விட்டது.

சட்டக் கலை பயின்று, செந்தமிழிற்பேச சிறிது சிறிது முயன்று, அம் முயற்சி வெற்றி தராவிட்டாலும் ஏதோ ஒருவகைத் தமிழில் ஓயாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிவரும் ஒப்பற்ற திருப்பணியைப் புரிந்துவரும் "உத்தம குணசீலர்" தான் தோழர் டி. செங்கல்வராயன் பி. ஏ. எல். எல். பி.! — ஆனால் அந்த "உத்தம குணசீலரும்"தான் அன்றந்த இடத்திலே வெட்கத்தால் உடல் குறுகி உள்ளமும் குறுகி வீற்றிருந்

காமராஜரும் செங்கல்வராயரும் ஆந்திர கேசரி பிரகாசம் காருவும் மட்டும்தானா, இல்லை இல்லை, அன்று, அந்த இடத்தில் கூடியிருந்த ஐந்நூறுக்கு மேற்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் அத்தனைபேருமேதான் அவமானத்தால் அரிக்கப்படும் வேதனைமிகு நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

காமராஜர் — செங்கல்வராயர் - ஆந்திர கேசரி — ஐந்நூறுக்கு மேற்பட்ட காங்கிரஸ் வாதிகள் — இத்தனை பேரையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் அவமானச் சின்னங்களாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்த மாபாவி யார் என்று மட்டற்ற ஆத்திரத்துடன் கேட்கத் தோன்றும் மாபெருந் தியாகிகள் என்று தங்கட்குத் தாங்களே மகுடம் சூட்டிக்கொண்டுள்ள தேசபக்த திலகங்கட்கு!

ஆத்திரப்படவேண்டாம் அன்புள்ள தேசபக்தர்களே, உங்கள் மாவீரர்களை மகத்தான வேதனைக்கும் வெட்கத்துக்கும் ஆளாக்கியது வேறு யாருமல்ல — ஒரு சாதாரண மேஜைத்துணி! ஆமாம்! மேஜை மீது அலங்காரத்துக்காக விரிக்கப்பட்டிருக்கும் விரிப்புத்துணி! ஆம், அந்தத் துணிதான் இத்தனை வீராதி வீரர்களையும் வெட்கப்படும் நிலைக்கு விரட்டி அடித்து விட்டது.

கட்டுக் கதை என்பீர்கள் — கற்பனை ஓவியம் என்பீர்கள் — வெறும் புளுகு என்பீர்கள் — வார்த்தை ஜாலம் என்பீர்கள் — என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள் கவலையில்லை இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருப்பதுமட்டும் உண்மை! முழு உண்மை!

ஜனவரி 23ம் நாள் மாலை
சென்னை செயின்ட் மேரி மண்ட
பத்தில், சென்னை ஜில்லா காங்கி
ரஸ் செயற்குழுவின் சார்பில் ஒரு
பொதுக்கூட்டம் நடைபெற்றது.
அந்தப் பொதுக்கூட்டத்தில் தான்,
அப்பொதுக்கூட்ட மேடைமீது
நிறுத்தப்பட்டிருந்த மேஜைமேல்
விரிக்கப்பட்டிருந்த ஓர் அலங்கார
துணி, அக்கூட்டத்திற்கு வந்திருந்
அத்தனை காங்கிரஸ் வாதிகளையும்
வெட்கப்பட வைத்துவிட்டது.

ஆச்சாரிய கிருபாளனி-ஊர்பே
தெரியாதவரல்ல, பழம்பெரும்
காங்கிரஸ் தலைவர். மறைந்த உத்
தமர் காந்தியின் முக்கிய சிஷ்யர்
களில் ஒருவர். நான்கைந்து ஆண்டு
கட்கு முன்னால், அகில இந்திய
காங்கிரசின் தலைவராக ஒளிவீசி
வர். இந்த ஆண்டில்கூட பா
புருஷோத்தமதாஸ் தாண்டனைவி
அகில இந்திய காங்கிரசின் தலை
ராக வருவதற்குரிய தகுதியு
திறமையும் அதிகமான அளவி
அமையப்பெற்றவர் இவர்தா
என்று பண்டிட் ஜவர்லால் நே
உள்பட ஏராளமான காங்கிர
தோழர்களால் பாராட்டப்பட்டவ

இந்த அளவுக்குப்பேரும் புகழு
பெற்ற 'பெரியபுள்ளி,' ஆச்சார்ய
கிருபாளனி! அந்தப் 'பெரியபுள்ள
தான் சென்னைக்கு வந்தது ஜ
வரி 23 அன்று. வடநாட்டிலிருந்
இங்கு வருவது ஒரு துரும்பா
இருந்தாலும் அந்தத் துரும்புக்கு
சாஷ்டாங்க நமஸ்காரம் செய்
பூஜை புனஸ்காரங்களெல்லாம்
வதைத்தானே இங்குள்ள தேசி
வாதிகள் தங்களுடைய பிற
பயனாக எண்ணிக்கொண்டிரு
ன்றனர்! எனவே கிருபாளனி
ஒரு பெரிய தலைவர் சென்னை
வந்தபோது அவர்கள், அவரு
ஆரத்தி எடுத்து அன்பு வணக்
புரிந்து பொதுக்கூட்டம் போ
பூமானே வருக பெருந்தலை
வருக, என்றுவரவேற்புரைவழ
யதில் வியப்பென்ன இருக்கிற

அவர்கள் வரவேற்புரை வ
கியதில் வியப்பேதுமில்லை—அ
அவர்களுடைய வழக்கமான தி
பணி—ஆனால் அந்த வரவேற்பு
ரையைப் பெற்றுக்கொண்ட அ
வீரர் கிருபாளனி, அவர்
அமைத்துக் கொடுத்த பொ
கூட்டத்தில் பேசியிருக்கிற
இருக்கிறதே அதுதான் மிக
வியப்புக்குரியது.

ஸ்ரீஜத் கிருபாளனிக்கு சென்
மாவட்டக் காங்கிரஸ் செயற்

வினரால் நடத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் தோழர் செங்கல்வராயன்! தோழர் செங்கல்வராயன் தலைவர் முன்னுரையாக, தீரர் கிருபளானியின் அருமை பெருமைகளை அலங்காரமான ஆங்கிலத்தில் அற்புதமான முறையில் எடுத்து விளக்கிவிட்டு அமர்ந்தார், அமர்ந்ததும் எழுந்தார் கிருபளானி.

எழுந்த கிருபளானி முதலிலே கூறிய வாசகம், "இந்த மேசைத் துணியைப் பாருங்கோ" என்பது தான்!

ஒலிபெருக்கி முன் நின்றதும், கிருபளானி, பக்கத்திலே இருந்த மேஜைத் துணியைக் கையில் எடுத்து மக்கள் முன் காட்டி "இந்த மேஜைத் துணியைப் பாருங்கோ" என்று கூறியதும் யாருக்கும் எதுவுமே புரியவில்லை. திகைத்தனர் அனைவரும்.

"திகைக்கிறீர்களா? ஏன்? புரியவில்லையா? பாருங்கள் இத் துணியை! கதரா இது? இல்லை! வெளிநாட்டு மில் துணி! நடப்பது காங்கிரஸ் கூட்டம்! நடத்துபவர்களோ சென்னை மாவட்ட காங்கிரஸ் செயற்குழுவினா! கூடியிருக்கும் நாமோ பெரும் பெரும் காங்கிரஸ் தலைவர்கள்! நாம் நித்த நித்தம் நம்முடைய அரும்பெரும் வழிகாட்டிஎன்று பாராட்டிப் பாராட்டிப் புகழ்வதோ காந்தியடிகளை! அவர்நமக்குத் தந்திருக்கும் உபதேசமோ கதரைத் தவிர வேறு எந்தத் துணியையும் நாம் தீண்டவும் கூடாதென்பது! ஆனால் நாம். இங்கு போட்டிருப்பதோ வெளிநாட்டுமில் துணி! காந்தியடிகளை காங்கிரஸ் எவ்வளவு தூரம் மறந்துவிட்டது என்பதற்கு இதைவிட ஆதாரம் வேறென்ன தேவை?"

இந்த வாசகங்களை வீசினார் கிருபளானி கூடியிருந்த காங்கிரஸ் வாதிகள் அனைவரையும் பார்த்து! அந்த நேரத்தில் பார்க்கவேண்டுமே அவர்கள் திருமுகங்களை! ஐயோ பாவம்! என்ன இருந்தாலும் கிருபளானி இப்படியா வாட்டி வதைப்பது அவர்களை!

**காமராஜர்**
**பிரகாசம்**
**செங்கல்வராயன்**
**கூடியிருந்த ஏனைய காங்கிரஸ் தோழர்கள்**

எல்லோருமே அவமானச் சின்னங்களாகி விட்டனர் அந்த நேரத்தில்! வேறென்ன ஆகமுடியும்?

காந்தியடிகளாரை முற்றிலும் மறந்து விட்டது காங்கிரஸ் என்று திராவிடமுன்னேற்றக் கழகப்பேச்சாளர்கள்கூறினால், அவர்கள் மீது கல் எடுத்து வீசுவார்கள் சில சமயம்—வேக வேகமாக வெஞ்சிறைக்குள் பிடித்துத் தள்ளுவார்கள் வேறு சில சமயம்! ஆனால் இப்போது இப்படிக் கூறுபவர் கிருபலானி ஆயிற்றே! அவர் மீது கல் எடுத்து வீச முடியுமா? அல்லது சிறைச்சாலைக்குள் தான் அவரைத் தள்ள முடியுமா?

அவமானக் கடலிலே தத்தளித்துக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்களையும் தோழர்களையும் பார்த்து மீண்டும் பேசலானார் கிருபலானி.

"இன்று நாம் கூட்டம் போட்டிருக்கிறோமே இந்தச் சிறு மண்டபத்தில், இதுவா காங்கிரஸ் இயக்கத்துக்குப் பெருமைதரும் செயல்? நம்முடைய கூட்டம் அதோ சற்றுத் தொலைவில் தெரியும் அந்தப் பரந்த கடற்கரையில் அல்லவா கம்பீரமான முறையில் நடத்தப் பட்டிருக்க வேண்டும்? ஆனால் இக்கூட்டம் அந்த அழகான மணல் வெளியில் நடத்தப்படாமல் இந்தச் சிறு மண்டபத்தில் நடத்தப்படுவதற்குரிய காரணம் என்னவாம் தெரியுமா? கேளுங்கள் அந்த வெட்கக் கேட்டை! சர்க்கார் அனுமதி தர மறுக்கிறார்களாம் அங்கே கூட்டம் போட! சர்க்கார் என்றால் இப்போதிருப்பது பிரிட்டிஷ் சர்க்கார் அல்ல—நம்ம சர்க்கார்தான்!!'

ஆச்சர்யா கிருபலானி இப்படியெல்லாம் பேசிக்கொண்டு வரும் போது வெட்கம் தாங்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டனர் கூடியிருந்த காங்கிரஸ் வாதிகள் அனைவரும்! தலைகள் தாழ்கின்ற பரிதாபக் காட்சியைக் கண்டார் கிருபலானி. கண்டுங்கூட தன் சொற்பொழிவை அந்த அளவோடு நிறுத்தி வேதனைப்படும் உள்ளங்களை அவ் விபரீத நிலையிலிருந்து விடுவித்தாரில்லை கிருபலானி. மேலும் தொடர்ந்து பேசினார்:—

"நாம் ஏற்படுத்தப் போகும் இராமராஜ்யத்தில் பேச்சுரிமைக்குத் தடையே இருக்காது என்று எண்ணற்ற முறை கூறியிருக்கிறார் அந்த அறப்போர்த் தலைவர் காந்தியார். ஆனாலும் அவரைப் பின்பற்றுவதாகப் பெருமை பேசிக்கொள்ளும் ஒரு காங்கிரஸ் சர்க்கார்தான் இன்று இந்தத் தடையை அச்சமின்றி விதித்திருக்கிறது. உத்தமர் காந்திக்கு நாம் செய்யும் மற்றொரு மகத்தான துரோகம் இது!"

தேசிய வாதிகளின் துரோகப் பட்டியலை இந்த அளவோடுகூட நிறுத்தவில்லை கிருபலானி. அவருடைய சொற்பொழிவு மேலும் வளர்ந்தது.

"நாம் தியாகத் தீயிலே குதித்தெழுவது வெறும் சுயராஜ்யத்தைப் பெறுவதற்காக் மட்டுமல்ல. சுகராஜ்யத்தை அடையவும் தான்! நம்முடைய சுயராஜ்யம், சுகராஜ்யமாக இருக்கும்! உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இல்லம் இவை மூன்றும் நாட்டு மக்கள் எல்லோருக்கும் போதுமான அளவு நிச்சயமாகக் கிடைக்கும் என்றெல்லாம் காந்தியடிகள் நம்மைப் போன்ற ஆயிரமாயிரம் காங்கிரஸ் தோழர்கள் சார்பில் நாட்டு மக்களை நோக்கி நூற்றுக்கணக்கான முறை உறுதியுரை புகன்றிருக்கிறாரே—அந்த உத்தமர் அளித்த உறுதியுரையைக் காப்பாற்றியிருக்கிறோமா நாம்? இல்லை! காந்தியடிகளுக்குக் காங்கிரஸ் உறுப்பினர்கள் செய்துள்ள மற்றொரு துரோகம் இது!"

காங்கிரஸ் கட்சி, இந்தியத் தந்தை காந்தியடிகளுக்குச் செய்து வரும் மறக்கமுடியாத மாபெரும் துரோகங்களை இதுபோல அடுக்கடுக்காக எடுத்துக் காட்டினார் கிருபலானி. குனிந்த தலையை நிமிர்த்த முடியவில்லை தேசிய வாதிகளால்! வெட்கக் கடலை விட்டு நீந்திக் கரையேறி வெளியே வர இயலவில்லை அவர்களால்!

வேறு யாராவது இப்படியெல்லாம் பேசியிருந்தால் தேசத் துரோகிகள் அப்படித்தான் பேசுவார்கள் என்று எளிதாகக் கூறி விரைவாகத் தப்பித்துக் கொள்ளலாம்! ஆனால் இப்போது இப்படிப் பேசுபவரோ, கிருபலானி! தியாகத்தின் சின்னம் என்று தேசிய வாதிகளால் ஆயிரமாயிரம் முறை பாராட்டப்பட்டவர்! எனவேதான் அவர், தேசியவாதிகளின் துரோகப் பட்டியலை அடுக்கடுக்காக எடுத்

(18-ம் பக்கம் பார்க்க)

மக்கள் பெருக்கத்தின் அபாயத்தை
கர்ப்பதடைக்கு
விஞ்சானமுறைப்படி தயாரிக்கப்பட்ட
மிருதுவான அமெரிக்கன் கருவிகள்
ஆண், பெண், கையாள்வது
செட்டு விலை ரூ 2/8 தபால்செலவு
31, BEAT, MULLER & Co

# சென்னையில் பலமான தடியடி

★

## அடக்குமுறை அத்தியாயம், மறுபடியும்!

★

## முன்ஷி வருகை: மக்கள் வெறுப்பு!

(*)

### கோவிந்தசாமி—என். வி. என்—முனுசாமி கைது.

★

1-2-51 வியாழன் பிற்பகல் 3 மணி அளவில் டில்லி சர்க்காரில் உணவு அமைச்சராக வீற்றிருக்கும் தோழர் முன்ஷி சென்னை ராஜாஜி மண்டபத்திற்கு வர இருக்கிறார் என்பதை அறிந்த நாள் முதல், சென்னைத் திராவிட மக்கள் அந்த நாள் என்று வரும் அவருக்குக் கருங்கொடி காட்டித் தம் அதிருப்தியைத் தெரிவிக்க என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

கடைசியில் அந்த நாளும் வந்தது, திராவிட மக்களும் பல்லாயிரக் கணக்கில் திரண்டனர். முன்ஷியும் வந்தார். கருங்கொடியும் காட்டப்பட்டது.

பிற்பகல் ஒரு மணி முதலே, வீரத்திராவிடர்கள், சென்னையின் நாலாபுறங்களிலிருந்தும், ராஜாஜி மண்டபத்தை நோக்கி சாரை சாரையாகத் திரண்டு செல்லலாயினர்.

2½ மணி அளவில், கூட்டம், வெள்ளம்போல் பெருகிவிட்டது. மக்கள் கடலிடையே மிதக்கும் தெப்பமாகிவிட்டது ராஜாஜி மண்டபம்.

நிமிஷத்திற்கு நிமிஷம் கூட்டம் அளவில் பெருகிக்கொண்டே வந்தது.

அரும்பு மீசை வாலிபர்கள், திங்கள்முக மாதரார்கள், தண்டூன்றும் முதியவர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், பாட்டாளி உலகத்தவர்கள், சர்க்கார் உத்யோகஸ்தர்கள், வாணிப நிலைய அலுவலர்கள் ஆகிய பல் வேறு திறத்தினரும் கருங்கொடி காட்டக் கூடியிருந்த திராவிட முன்னேற்றக் கழக அணிவகுப்பில் தத்தமக்குரிய பங்கினைச் சிறப்புற மேற்கொண்டனர்.

கூடியிருந்த அத்தனை பேரும், உற்சாகத்தின் உருவங்களாக, உணர்ச்சியின் சின்னங்களாக, வீரத்தின் நிலையங்களாக, வருங்காலத் திராவிடத்தின் விடிவெள்ளிகளாகவே காட்சி தந்தனர்.

அமைச்சர் முன்ஷி வருவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்பு, அமைதியின் அடையாளச் சின்னமாக இருந்த திராவிட மக்கட் கடல் மீது, ஒரு காரணமுமின்றி, ஆட்சியாளர்களின் அதிகார அம்புகளாக இருக்கும் போலீசார் தடியடி தர்பாரைத் தொடங்கி வைத்தனர்.

பொது மக்களைப் போலீசார் சுழன்று சுழன்று வேட்டையாடினர்.

பலருக்குப் படுகாயம்.

எண்ணற்ற தோழர்கட்கு ஊமைக்காயம்.

ஒரு தொண்டர் பலமாக அடிபட்டு சுருண்டு விழுந்த காட்சி மிகவும் பரிதாபகரமாக இருந்தது.

தாய்மார்களிலும் சிலருக்கு அடி.

போலீசாரின் தடியடி பலமாக இருந்துங்கூட மக்கள் புன்முறுவலுடன் மவுண்ட்ரோடின் பல பகுதிகளிலும் இருந்தபடி முன்ஷியே திரும்பிப்போம் என்று முழக்கமிட்டபடி இருந்தனர்.

அமைச்சர் வருவதற்கு முன்னர், சரியாக 2-45 மணிக்கு மேயர் பார்க்கிலிருந்து, **தோழர் வி. முனிசாமி எம். சி.** அவர்கள் கையில் நீண்டதோர் கருப்புக்கொடிதாங்கி, "முன்ஷியே திரும்பிப் போம்—வடநாட்டு ஆதிக்கம் ஒழிக—டில்லி ஆட்சி எங்கட்கு வேண்டாம்" என்ற இலட்சிய ஒலிகளை எழுப்பிய வண்ணம் ராஜாஜி மண்டபத்தை நோக்கி வந்தார். அவருடன் தோழியர் ஏ. பி. செல்வக்கண்ணம்மாள், தோழர் இரத்தினம் மற்றும் சில தோழர்களும் கருப்புக் கொடிகளுடன் தொடர்ந்து வந்தனர். சிறிது தூரம் வந்ததும் மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டனர்.

வேறோர் புறத்தில் கருங்கொடி காட்டியவண்ணம் பெரியதோர் கூட்டத்துடன் நின்று கொண்டிருந்த தோழர்கள் என், வி. நடராசன், கே. கோவிந்தசாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஐவர்மீதும் சென்னை நகர சட்டம் 75-வது பிரிவுப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் நிலையத்திற்கு இவர்கள் கொண்டு வரப்பட்டதும், தோழர்கள் காஞ்சி மணிமொழியார், சி. கணேசன் ஆகியோர் அங்கு சென்று இவர்களைக் கண்டு சிற்றுண்டி அளித்து உரையாடிவிட்டு வந்தனர்.

வழக்கு 2-2-51 அன்று விசாரணைக்கு வருகிறது.

—

# மலையாளத்தில் மலர்ந்த மக்கள் கவிஞர்

——[:-:]——

## எத்தர் கோட்டைக்கோர் எரிகொள்ளி

——*——

## கேரளக் கவிஞர் வள்ளத்தோல்

—X—

(சி. ஜனார்த்தனன்)

★

இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பைமேட்டுக்கு வரவேண்டும், என்று எக்காளமிட்டார் சோவியத் நவயுகத்துக்கு இலக்கிய அடித்தளம் அமைத்த கவிஞர் மாயாக்மி வாஸ்கி. கலையைக் காலத்தின் கண்ணாடியாக்கினார், முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடிகள். ஏழை கோழையல்ல, எரிமலை, என்று ஏடுகளிலே எடுத்துக்காட்டினார் எமிலி ஜோலா. புதுமைத் துறையிலே ஆங்கில இலக்கியத்தைப் புகுத்திய பேரறிஞர் பெர்னார்ட்ஷா, அமெரிக்காவின் வால்ட் விட்மன், தமிழகத்தில் மறுமலர்ச்சிக்கு முன்னோடியாயிருந்த மகாகவிபாரதி, கொடியோர் செயலைக் கண்டு கொலை வாளினை எடடா என்று குமுறி எழுகின்ற பாரதிதாசன், ஆகியோர், தங்கள் தங்கள்நாடுகளின் எல்லைக்குள்ளே, எத்தர் கோட்டைகளைக் கொளுத்தும் எரிகொள்ளிகளானார்கள்.

அவர்கள் அமைத்துக்கொடுத்த போர்ப் பரணியைப் பாடிக்கொண்டே தான் புதுமை விரும்பிகள், காட்டுப்பாதையிலே செந்நாய் சீறியபோதும், புல்லர்களை வீழ்த்திக் கொண்டு முன்னேறினார்கள். கல்லடியும் சொல்லடியும் அவர்களைத் தாக்கியபோதும் அவர்கள் கலங்கி விடவில்லை.

தமிழகம் உலுத்தர்களை வாட்டி வதைக்கும் உலைக்கூடமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. கார்ல் மார்க்ஸ் பிறந்த நாடு, காட்டுமிராண்டிகளின் காடாக இருந்த காலத்தில், லெனின் பிறந்த நாடு பனிப்பாறைக் கூட்டமாக இருந்த போது, எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற, பகுத்தறிவு இயக்கத்தின் மூல சூத்திரத்தை, அறிவியக்கத்தின் அடிப்படையை திருவள்ளுவர் கூறியிருக்கிறார். அவனி அநாகரீகக் களஞ்சியமாக இருந்த காலத்திலும் நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தித் தொழும் முறையை எதிர்த்துக் குரலெழுப்பிய பகுத்தறிவு வாதிகளைக் கொண்டிருந்தது தமிழ்நாடு!

கன்னித் தமிழகம் மட்டுமல்ல, கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் வழங்கும் பிற திராவிடப் பகுதிகளும், இதற்கு விதி விலக்கல்ல. இராமாயணம் பாடிய வடநாட்டு துளசிதாஸ் நமக்கு அறிமுகப் படுத்தப்பட்ட அளவுக்கு, சில அமைப்பால் நம்முடன் நெருங்கிப் பிணைந்திருக்கும் திராவிடத் தேசிய சமுதாயத்தின் பிற அங்கங்களைப் பற்றியும் அவைகள் தோற்றுவித்திருக்கும் கவிஞர்களைப்பற்றியும் அறிமுகப்படுத்தப் படவில்லை. அன்றைய வால்மீகியைப்பற்றி அறிந்திருக்குமளவுக்கு இன்றைய வள்ளத்தோலைப் பற்றி, தமிழகத்தினர் அறிந்திருக்கக் முடியாது. மராட்டியம் நம் கண்ணிலே மலருமளவுக்கு மலையாளம் மலருவதில்லை அல்லவா? தூரத்துப் பச்சையிலேயே திளைத்து விடுகிறோம், அண்மையிலுள்ள அழகுப் பச்சையைப்பற்றி அறிந்துகொள்ளாமல்!

மலையாளத்தின் மறுமலர்ச்சி சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தவர் வள்ளத்தோல். கலை கலைக்காகவே, என்ற கருத்துக் குருடரின் குரலைக் கூச்சலென்று தள்ளி விட்டவர் வள்ளத்தோல். வாழ்க்கை என்கிற பாலை வனத்திலே, மக்கள் களைப்பாறுவதற்கேற்ற பல வளமார் சோலைகளைப் படர வைத்தார் அவர். அவர், இன்று, நம்முடன் வாழ்பவர். சென்னை அரசாங்கத்தின் ஆட்சி மன்றக் கவிஞர் [Poet Laureate].

அண்மையிலே உலகின் கண்களுக்கு முன் தோன்றினார், திராவிடத்தின் வெள்ளத்தோல். இரண்டாவது உலக சமாதானக் காங்கிரஸ் [Second world Peace Congress] போலந்து நாட்டின் தலைநகரான வார்ஸாவில் நடைபெற்றது. அதிலே இந்தியத் துணைக் கண்டத்தின் உறுப்பினர்களிலே ஒருவராகச் சென்றிருந்தார். அதில் உலகின் பிரதிநிதிகளும் கூடியிருந்த அம் மாபெரும் மாநாட்டிலே, தாம் சமாதானத்தைப் பற்றிப் புனைந்திருந்த ஒருமலையாளப் பாடலைப் படித்துக் காட்டினார். அப்போது, அம் மாநாட்டில், ஊசி போட்டால் கூட கேட்கக் கூடிய அளவு அமைதி நிரம்பி யிருந்ததாம். அவர் அதைப் படித்து முடித்ததும், அம் மாநாட்டினர் அனைவருமே, ஒரு தனி மனிதனைப் போல எழுந்து, ஆரவாரம் செய்து அஞ்சலி புரிந்தார்களாம். உலக சமாதான மாநாடு என்றுமே மறக்க முடியாத காட்சிகளில் அதுவும்

ஒன்றுயிருந்தது என்று பம்பாய், "கிராஸ் ரோட்ஸ்" ஆசிரியரான ரமேஷ்தபர் கூறுகிறார்.

தாகூரைப் போல, பிரேம் சந்தைப் போல, இக்பாலைப் போல, வெள்ளை ஏகாதிபத்யத்துக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார் வள்ளத்தோல். பாரதிதாசனைப் போல, பொருளாதாரத் துறையிலே முதலாளித்துவத்தையும், சமுதாயத் துறையிலே மௌடிகத்தையும் வேரறுத்து வருபவர்.

மலையாள மானிலத்திலே, பொன்னானி வட்டாரத்திலே, மங்களம் கிராமத்திலே, தோன்றியவர் வள்ளத்தோல். அங்கேதான் மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு, மலையாள மொழியின் தந்தை என்று பாராட்டப்படும் தஞ்சாத் ஏழுதாசன் பிறந்து, தம் கவிதைகளைப் புனைந்தாராம். ஆயுர் வேதத்தைக் கற்றும் மருத்துவத் துறையிலே மனம் செல்லாததால், இளமையிலேயே புலமைத் துறையிலே புகுந்து விட்டாராம். துவக்க காலத்திலே பாமர மக்களுக்குப் பிடித்தமான கட்டுக் கதைகளையும் இதிகாசக் கதைகளையுமே, பாடி வந்தவர், அரசியல் சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றிப் பாட ஆரம்பித்த பிறகுதான் மக்கள் கவிஞராக மாறினார். [People's Poet]

1920-ல் தான், வள்ளத்தோல், கேரளத்தின் விடுதலைக் குரலானார். தேவர்களை மறந்து தேசத்தைப் பற்றிப் பாடத் துவங்கினார். அதற்கு முன்னால், மலையாள இலக்கியம், பண்டிதர் கூட்டம், கொச்சி திருவாங்கூர், கள்ளிக்கோடு ஆகியவற்றைச் சேர்ந்த அரச குடும்பங்கள் ஆகியவை, இளைப்பாறும் கூடாரமாக இருந்தது. கவிஞர்கள், கவிதைகளுக்கான அடிப்படைகளை இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலிருந்தும், கோயில் விழாக்களில் ஆடும் பரத்தையரது 'பாவங்'களிலிருந்தும், ஊருணிகளிலே குளிக்கும் காரிகையரது அழகிலிருந்தும் திரட்டி வந்தனர். இது நானல்ல, தோழர். சித்ரபானு நம்பூதிரிபாடத் கூறுவது! [They took their inspiration from the well known themes of the Ramayana and Mahabharata or from the bathing beauties of public tanks and the......]

அந்நிலையைக் கலைத்தவர்கள் குமாரன் ஆசானும் வள்ளத்தோலுமே. மக்களுடைய இதய ஆசைகளையும் ஆர்வத்தையும், எண்ணங்களையும் ஏக்கங்களையும் அவர்கள் பிரதிபலித்தனர். உத்தமர் காந்தியடிகளைப்பற்றி வள்ளத்தோல் எழுதிய பாட்டொன்றைப் படித்த கவி தாகூர் ஆச்சரியப்பட்டு, இப்பேற்பட்ட ஓர் அருமையான கவிஞர், இந்தியாவின் ஒரு மூலையிலே இருப்பதைப் பற்றி ஆச்சரியப் பட்டாராம்.

தீண்டாமையையும் சாதித் திட்டத்தையும் தாக்கி, "சுத்தரில் சுத்தன்" என்ற பாட்டில் எடுத்துக் காட்டியுள்ளார். அணங்கு, ஆடவரின் அலங்காரப் பொருளல்ல என்பதை ஆணவக்காரருக்கு ஆணித்தரமாக அறிவுறுத்தி யிருக்கிறார்.

> பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்கள்; இயக்கத் தோழர்கள் அனைவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றி கலந்த வணக்கங்கள்.
>
> சி. பி. சிற்றரசு
> ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கருத்துக் குருடருக்கு, காதலின் மகத்துவத்தை, "ராதாரிடே கிரி தார்த்தாதா" (Radha's Solace, 'ஜாதி பிரபாவம்' (The Pride of) Caste) "ஒடுக்கதெ குறிப்பு" (The Last Letter) என்ற பாடல்களிலே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"காட்டுப் பாதையிலே இலட்சிய புரி நோக்கி, முன்னேறுவோர் கஷ்ட நஷ்டங்களைக் கண்டு கலங்கக் கூடாது. வெற்றி தோல்வியைப் பற்றி வேதனை அடையக் கூடாது. வழியிலே மரணமே நேர்வதானாலும பாதையிலே கிடக்கும் முட்களை முறியடித்துக் கொண்டே முன்னேற வேண்டும். ஏனெனில் அம்முட்கள் நமது வருங்கால சந்ததியினர், அப்பாதையிலே நடக்கும்போது, அவர்களையாவது குத்தாமல் இருக்கும் அல்லவா?" மேற்கண்ட கருத்தை ஒரு பாடலின் அடிப்படையாக ஆக்கி யிருக்கிறார்.

வள்ளத்தோல் சோவியத் ருஷ்யாவைக் காதலிப்பவர்களிலே ஒருவர். "பலாத்காரத்தை எதிர்க்காத காந்தி" என்று லெனினைப் பற்றிக் குறிப்பிடுவாராம். "ஜார் ஆட்சி பரப்பியிருந்த இருளை லெனின் ஒழித்தார். அங்கே மாக்ஸிம் கார்க்கி, விடுதலை விளக்கை ஏற்றி வைத்தார்" என்று கூறியிருக்கிறார்.

பார் முனையை ஏர் முனையிலே, அவர் கண்டார். 1946-47 ல், மலையாள உழவர்களின் அறப்போரை, அடக்கு முறையால் அடக்க ஆட்சியாளர் நினைத்ததை எதிர்த்துக் குரலெழுப்பினார், வள்ளத்தோல்.

திராவிட இயக்கத்தின் வீரர்களுக்கு விலங்கிடுகிறது, அல்லவா, ராம ராஜ்யம்? கவிஞர் கூறுகிறார், "வீரர்களுக்கு விலங்குகள், வளையல்கள், அதிலும் பொன் வளையல்கள்!" [For the brave people, handcuffs are like gold bangles] அவர்களுக்கு சிறைச்சாலை, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்றார் பாரதிதாசன். அவர்களுக்கு 'சிறைக் கோட்டமே சிங்கார பவனம்' என்றார் வள்ளத்தோல்! [And prisons are like comfortable mansions]

வங்கத்திலே தாகூர் சாந்தி நிகேதனை நிறுவியது போல கேரளத்திலே கேரள கலா மண்டல் என்ற கலைக் கூடத்தை, நிறுவியிருக்கிறார். கதகளி, மோகினியாட்டம், சக்யர் கூத்து போன்ற கேரளக் கலைகளுக்குப் புத்துயிர் ஊட்டி உள்ளார்.

'இலக்கியத்துக்கும் கலைக்கும் அடிப்படை, காதல், அதாவது மக்கட் காதல்' என்பது சீனப் பழமொழி. அதை அடித் தளமாக்கி மறுமலர்ச்சியைத் தூவியோரே, புத்துலகச் சிற்பிகள். வைதீகமும் வர்ணாஸ்ரமும் காலப் புயலின் முன் தர்ப்பைப் புல்கள்! ஆனால் பெர்னார்ட் ஷாக்களும், வள்ளத்தோல்களும் வருங்கால உலகின் விடிவெள்ளிகள்.

பகுத்தறிவாகிய மல்லிகை மொக்கு, அவர்களிடம் இருக்கிறது. இன்று அது மொக்காயிருக்கலாம். ஆனால் அது மலர்ந்து, மறுமலர்ச்சி மன்பதையை, மலர வைக்கத் தான் போகிறது!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடும் வியாதிக்கு ஆட்பட்டு சாரை சாரையாக இறந்தொழியாமல் காப்பாற்றி இருக்கிறது.

வியாதிகளுக் கெல்லாம் காரணம் பாக்டீரியாஸ் என்ற சிறு உயிர் அணுக்களே என்பதை முதன் முதல் கண்டு உலகத்துக்கு விண்டவர் பாஸ்டியூராகும்.

அவர் தான் நாய்க்கடி விஷத்தைப் போக்கும் அரும் மருந்தையும் கண்டு பிடித்தார்.

மாரியாத்தாளின் கோபத்தினாலும் ஐயனாரின் அகங்காரத்தினாலும், சாமியாரின் சாபத்தினாலும் தான் வியாதி வருகிறது என்று நினைந்து "ஐயோ மகமாயி! உன் விளையாட்டை கொஞ்சம் தணிச்சுக்கோ" என்று கதறியழுத மக்கள் கூட்டத்திற்கு பாஸ்டியூர் கண்ட அம்மைக் குத்தும் முறை ஒரு வரப்பிரசாதம் தானே!

ஆனால் மக்கள் அதை ஏற்க மறுத்தனர், பூசாரிகளும், புரோகிதர்களும், சாமியாடிகளும் தந்த திரு நீற்று குங்குமப் பிரசாதத்தில் மயங்கியிருந்ததால்.

அதுமாத்திர மல்ல! கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்துவரும் நம் அறிவியக்கத்தை எவ்வாறு கண்டித்தனரோ அது போலவே ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய சீர்திருத்த வாதிகளையும், விஞ்ஞானிகளையும் சுடும சொற்களைச் சொல்லுவதிலிருந்து கடும் சிறையிலிட்டுத் தூக்குமேடைக்கு அனுப்புகிற வரையிலே பலமுறையிலே சீரழித்தனர்.

ஆனாலும் உண்மை, என்றும் போல வெற்றிபெற்று தலைநிமிர்ந்து நிற்கத்தான் செய்தது.

மருத்துவவிஞ்ஞானம்வளர்ந்தது. பெண்களும் மருத்துவ பணி மனையில் உதவி செய்யலாம் என்பதை உலகுக்கு அறிவிக்க முதன் முதல் முன் வந்த நைட்டிங்கேல் என்ற இங்கிலாந்து பெண் கடும் போர் முனைக்கெல்லாம் சென்று படை வீரர்களுக்கு வைத்திய உதவி செய்து வீரப் பெண்மணியானாள். அன்று அவள் துவக்கிய முயற்சி வெற்றி பெற்று, இன்று உலகெங்கும் பெண் நர்ஸுகள் உலவி, வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது என்று இறுமாந்து வீம்பு பேசிடும் வைதிக வயோதிகர்கள் கூட மனமகிழ முறையிலே நற்றொண்டு புரிந்து வருகின்றனர்.

க்ஷயரோகத்தைப் போக்கும் நல்ல மருந்தைக் காண முயன்ற ஐரோப்பிய விஞ்ஞானி ஒருவர் அந்த வியாதி உடலில் செய்யும் இடையூறுகளை அறிய தன் உடலிலேயே அந்த வியாதிக்கிருமிகளைப் புகுத்திக் கொண்டார்.

அவர் சொன்னார்:

"என்னுடைய மார்பு நுரையீரல் வியாதியினால் பீடிக்கப்பட்டு விட்டது. என்னைக் கொல்ல வேண்டுமென்று நினைக்கும் விரோதி யாராவது இருந்தால் என்னை எளிதாகக் கொன்று விடலாம். அந்த வழி வேறொன்றுமில்லை. எனக்கு கோபம் உண்டாகும்படி பேசினால் போதும்!"

அவரும் அப்படித்தான் இறந்தார்.

இவ்வாறாக பல விஞ்ஞானிகள் மக்களின் மூடக் கொள்கைகளுக்குப் பயந்து பசி நோக்காமல், கண் துஞ்சாமல், மெய் வருத்தம் பாராமல ஆயிரக்கணக்கான ஆய்வுகளைச் செய்தபின் மருந்து கண்டனர்.

ஒரு வியாதியின் பலநிலைகளுக்கு பல மருந்துகளை பல முறையில் குறைத்தும் கூட்டியும் கொடுக்க வேண்டியிருப்பதைக் கண்டு இலட்சக்கணக்கான மருந்துகளை இடையறா உழைப்பால் செய்து முடித்தனர்.

இந்த நிலையில் தீராத வினைகளையெல்லாம் ஒரு மருந்து பொட்டலம் தீர்த்து வைக்கும் என்று நம்பும் மக்கள் கூட்டமும், அதை உடனே மறுக்கும் தைரியமில்லாத அரசாங்கமும், இந்த மௌடீகத்தை ஆதரித்துப் பேசும் படித்த பி. எஸ்ஸி, எம். எஸ்ஸிகளையும் இருபதாம் நூற்றாண்டில், இந்த நாட்டில் தவிர வேறு எந்த நாட்டில் காண முடியும்?

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

துக் காட்டியபோது தலையைக் குனிந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போய் விட்டது காமராஜர் உட்பட அங்குக் குழுமியிருந்த அத்தனை வீராதி வீரர்கட்கும்!

* * *

காங்கிரஸ் தோழர்கள் இருக்கட்டும் ஒருபுறம்! பொது மக்களே நீங்கள் நினைத்துப் பாருங்கள் ஒரு ஜில்லா காங்கிரஸ் கூட்டத்தில், அதுவும் அன்பர் காமராஜர் முதலான "அரும் பெரும் தலைவர்"களால்கூட்டப்பட்ட அரியதோர்கூட்டத்தில், அதிலும் காந்தியடிகளாரின் உள்ளத்தைக் கவர்ந்தவர் என்று உன்னதமான முறையில் உயர்த்தி உரைக்கப்பட்ட தலைவர் கிருபலானியை வரவேற்க நடத்தப்பட்ட கூட்டத்தில் மேஜைமீது விரிக்கப்பட்டிருந்த துணி, அயல் நாட்டு மில் துணி! இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியை, உங்களிற் பலர், ஒரு காலத்தில் ஆதரித்திருக்கிறீர்களே, அதை எண்ணினால், உங்கட்கு வெட்கம் பிறக்காமலா இருக்கும்?

---

## வாசகர்கட்கு!

காகித விலை கடுவிஷம் போல் ஏறி வருகிறது. பவுண்ட் ஆறணா விற்ற தாள், இப்போது பதினோரணா, பன்னிரண்டணா விற்கிறது. இனியும் விலை கூடுமே தவிர குறையாது என்று 'விஷயமறிந்த வட்டாரங்கள்' தெரிவிக்கின்றன. நமக்கோ, நஷ்டம் அதிகம். ஆட்சியாளர்களோ காகித நெருக்கடியைத் தீர்க்கத் துளியளவும் முயல்கின்றாரில்லை. இந் நிலையில், பக்கங்களைக் குறைப்பது அல்லது விலையை உயர்த்துவது ஆகிய இரண்டே வழிகள் தான் நம்முன் நிற்கின்றன. பொருளாதார நெருக்கடி மிகுந்துள்ள இந்தக் காலத்தில் நம் இதழின் விலையை உயர்த்தி வாசகர்கட்கு மேலும் தொல்லைதருவது முறை ஆகாது. ஆகவே சென்ற வாரம் முதல், 4 பக்கங்களைக் குறைத்து, இரண்டணா விலையிலேயே "போர்வாள்" இதழை வெளியிட்டு வருகிறோம். காகித நெருக்கடி தீர்ந்து, தாள் விலை இறங்கியதும் மீண்டும் முன்போலவே 20 பக்கங்களுடன் இதழ் வெளிவரும். அது வரை, இதழ் 16 பக்கங்களுடன் தான் வெளி வரும். தோழர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம். வணக்கம்.

ஆசிரியர்கள்.

தொடர் நாடகம்.

# திலோத்தமா

(கு. தனபாலன்.)

## அங்கம் : 12

இடம் : திலோத்தமாவின் அறை.

தி : [காவலாளியிடம் ஓர் ஓலையைத் தந்து...] இது விஷயமாய் எவரிடமும் மூச்சு விடாதே ஜாக்ரதை!

யோ. வீ : உத்தரவு [போகிறான்]

(தனிப் பேச்சு)

தி : ஐயோ, நான் ஏன்தான் இந்தப் பாவிக்குப் பெண்ணாய்ப் பிறந்தேனோ தெரியவில்லையே! வாழ்நாள் பூராவும் வஞ்சகத்தாலேயே, வாழ்வு நடத்தும் கல்நெஞ்சனும் என் தந்தை ஒழியும்வரை இந்த நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் விமோசனமே கிடையாது! என் வாழ்க்கை வளம்பெற வேண்டுமானால் அருணனை நான் நாயகனாக அடையவேண்டுமென்று எண்ணியிருந்தேன் ஆனால் அது பகற்கனவாக முடிந்துவிட்டது. இனி அதைப்பற்றி வீணே எண்ணி வருந்துவதில் பயனொன்றும் இல்லை நான் காதலிப்பது போலவே காஞ்சனாவும் அருணனைக் காதலிக்கிறாள். நான் மனம் வைத்தால் அருணனை அடைய முடியும். ஆனால் காலம் மிஞ்சிவிட்டது. மேலும் தாயற்ற காஞ்சனா கண் கலங்கி நிற்க நேரிடும் என் தோழியின் நல்வாழ்வே என் வாழ்வு..., என் தோழிக்காக என் உயிரையும் தியாகம் செய்வேனென அன்று அமைச்சர் மணிவேலர் முன்பு சொன்னேன். ஆனால் இன்று காதலைத் தியாகம் செய்யப் பின்வாங்கினால் பிறகு என் வார்த்தையில்தான் என்ன உண்மை இருக்கமுடியும்? ஆம்.. ....என் காதலைக்காஞ்சனாவுக்காகத்தியாகம் செய்வேன். நான் என் தந்தையின் சூழ்ச்சிப்படி அருணரைச்சந்திக்கும்போதுஎன் எண்ணத்தை--இலட்சியத்தை வெளியிடப் போகின்றேன். அந்த ஒரு வீரனால்தான் இந் நாடு நல்ல நிலைமையை அடையும். அதற்காகத்தான் அவர் பிறந்திருக்கின்றார். எப்படியாவது இந்தக்கல்நெஞ்சர்களின்வஞ்சக வலையில் அவரைச் சிக்கவொட்டாமற் செய்து என் தோழி, கள்ளங்கபட மறியாத காஞ்சனாவுக்கு மணம் செய்து வைத்து விட்டால் போதும். பின்பு நான் இறந்தால் கூடக் கவலையில்லை. இதற்காக என்ன வந்த போதிலும் சரி, நான் அஞ்சப் போவதில்லை!

## அங்கம் : 13

இடம் : சிற்பி சிங்காரவேலர் வீடு.

[சிங்காரவேலர், அருணன்]

அரு : இதற்காக என்ன வந்த போதிலும் சரி, நான் அஞ்சப் போவதில்லை.

சிங் : அருணா, அமைதியாய் இரு!

அரு : ஹூம்...அமைதி.... நாட்டை காட்டுப் பாதையில் அழைத்துச் செல்லும் ஆரியப் புல்லுருவிகளின் கொட்டம் அழிந்த பின்புதான் அமைதி! மதமெனும் கழனியில் மூடப் பழக்க வழக்கங்களெனும் பயிர்களை நாளுக்கு நாள் பயிராக்கி, நாட்டு மக்களை அறிவுப் பஞ்சத்தால் சாகடிக்கும் சாணக்கிய வர்க்கத்தின் சாகஸங்கள் தொலைந்த பின்புதான் அமைதி! எந்நாட்டவரும் போற்ற எட்டுத்திக்கிலும் புகழ்க் கொடி நாட்டி எக்காளமுடன்—ஏறுபோல் வாழ்ந்த தமிழன் இன்று கூனிக், குறுகி, ஆரியம் என்னும் இருட்டறையில் தள்ளப்பட்டுக்கிடக்கிறான். அந்த ஆரியக் கோட்டையைப் பகுத்தறிவெனும் ஆயுதத்தால் தூள்தூளாக்கி, விவேகமிழந்து—வீரமிழந்து—வீழ்ந்து கிடக்கும்தன்மானத்தமிழர்களை வெளியில் கொண்டுவந்த பின்புதான் அமைதி! பாட்டாளிகளின் பச்சை இரத்தத்தால் கிடைத்தசெல்வத்தைப்பரத்தையருக்கும், போதையூட்டும் மதுவுக்கும் செலவிட்டுக் கொட்டமடிக்கும் அந்தக்கொள்ளிவாய்ப் பிசாசுகள் தொலைந்தபின்புதான் அமைதி! அக்காளான்கள் அழியும்வரை—அழிக்கும் வரை கண் துஞ்ச மாட்டேன். அதற்காக அயராது அல்லும் பகலும் உழைப்பேன்! இது என் தமிழன்னை மீது ஆணை!

சிங்: அருணா....என் செல்வமே...வீரத்தின் குலவிளக்கே...மெச்சினேன் உன்னை, உன் வீரம் நிறைந்த அறிவுப் பேச்சுகளால் நான் எவ்வளவோ மகிழ்வடைகின்றேன். குழந்தாய்.... நான் சொல்வதைத்தலைகூர்ந்து கேள். கேட்ட பின்பு சிந்தித்துப் பார். இந்தக் கிழவனின் வார்த்தைகளில் அர்த்தமிருந்தால் எடுத்துக் கொள். அருணா....ஆரியம் ஒரு சூழ்ச்சிக் கோட்டை. அதன் பாதுகாவலர்கள் பெரிய மேதைகள் சூழ்ச்சியில் — சூதுவாதுகள் வகுப்பதில்! அவர்களுக்கு ஆயுதம் பிடிக்கத் தெரியாது. ஆனால் ஆயுதத்தை விட சக்தி வாய்ந்த யுக்திகள் பல தெரியும். அவர்களிடம் நேர்மை இருக்காது ஆனால் கூர்மையான புத்தி உண்டு. அவர்களிடம் ஆண்மை கிடையாது. ஆனால் ஆற்றல் அதிகம் உண்டு. அவர்கள் ஆடு மாடு மேய்த்தவர்கள் தாம், ஆனால் மாட மாளிகையையும் மண்மேடாக்கி விடுவார்கள் சூழ்ச்சியால்! அவர்கள் சிலர். நாம் மிகப் பலர்தான். இருந்துங்கூட அவர்களின் சக்தியைப் பற்றித்தான் இன்று மக்கள் பக்தியாகப் பேசுகின்றார்கள். தமிழன் தன் அறிவை—ஆற்றலை—ஆண்மையை — இழந்து விட்டான். தேகம் அனித்தியம், எல்லாம் அவன் செயல், நம்மாலாவது ஒன்றுமில்லை என்ற வேதாந்தத்தை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டான். வீரம் பேசிய தமிழன் வீழ்ந்து விட்டான் ஆரியத்தின் அடிகளில்! அதன் பாதமே தஞ்சமென அஞ்சலி செய்து கிடக்கின்றான் இப்போது! பகுத்தறிவை அடகு வைத்துவிட்டு மறுமை என்னும் வேறுபிறப்பில் மோட்சமென்னும் பதவியை அடைய அழகான சிகையை எடுத்து விட்டு மொட்டையடித்துக் கொண்டான்! கழுத்திலே கொட்டையை கட்டிக் கொண்டான்! வரிக்கழுதையைப் போல சாம்பலை வாரி வாரி உடம்பெல்லாம் பூசிக்கொண்டான். வைதீகமென்னும் குட்டையில் ஊறின மட்டையாக ஆகிவிட்டான். மாற்றார் நடுங்க ஆட்சி செய்த தமிழன் தலை குனிந்து வாழ்வதற்குக் காரணம் ஆரியத்தின் சாஸ்திர சம்பிரதாயங்களெனும் சம்மட்டியடிகள்தான்! இவைகளுக்கு ஓர் நல்ல முடிவுகட்ட வேண்டும். வீழ்ச்சியுற்ற தமிழன் எழுச்சி பெற வேண்டுமென்று சில பல பொதுநலக் கருத்துடையோர் முனைந்தால் போதும்! கண்டதையெல்லாம் கடவுள் என்று கதைத்துக்காசு பறிக்கும் காலிக் கூட்டம் மேற் சொன்ன பெரியார்களுக்கு நாக்கறுத்தல்—நாடுகடத்தல்—சிறையில் தள்ளுதல்—தூக்கிலிடுதல்—இன்னபிற சித்திரவதைகளை ஏற்படுத்தத் தயங்கினதில்லை — தயங்குவதில்லை! இது வரலாறு சாற்றும் உண்மை! அருணா, இது இன்று நேற்று நடப்பதல்ல. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே நடந்துவருகின்றது இத்தகைய முறைக்கு சாவோலை தீட்டி சாவுமணி அடிக்க நாள் நெருங்கி விட்டது. ஆரியத்திற்குக் கல்லறைக் குழிதோண்ட மக்கள் முனைந்து விட்டார்கள். அருணா, நிலைமையை ஒருவாறு உனக்கு விளக்கிவிட்டேன். இனி நீ சர்வ சாக்கிரதையுடன் இருக்கவேண்டும். நீ எடுக்கப் போகும் காரியம் குந்தகமின்றி நிறைவேற வேண்டுமானால் அந்த சூழ்ச்சிக்காரர்களைப்போல் நீயும்கொஞ்ச நாளைக்கு மாறவேண்டும். அதாவது உனது காரியம் சித்தியாகும் வரையில்!

அரு: அப்படி யென்றால்?

சிங்: அருணா வஞ்சகத்தை வஞ்சகத்தால்தான் வெல்ல வேண்டும். நீ எடுக்கப் போகும் காரியம் உன் உயிருக்கே கூட உலைவைத்துவிடும். மாறுவேடத்துடன்தான் எதிரியின் கோட்டைக்குள் புகுந்து வேலை செய்யவேண்டும்...மகனே! இந்த முல்லை நாட்டில் எவ்வளவோ வீரர்கள் இருந்தும் உன்னை மட்டும் இதற்காக மந்திரியார் மணிவேலர் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை எண்ணுந்தோறும் நான் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போகின்றேன்! அருணா சாக்கிரதையாக நடந்துகொள்.

அரு: ஆகட்டுமப்பா!

[ஒரு காவலாளி வந்து வணங்கி ஓர் ஓலையை அருணனிடம் தருகிறான். அதைப் பிரித்துப்படித்துப்பார்த்து பரவசமடைகின்றான். தந்தை கேட்பதற்கு வேறு விதமாக சொல்லிவிடுகிறான். ஏனெனில் இளவரசி காஞ்சனாவைக் காதலிப்பது அவனது தந்தைக்கு இன்னும் தெரியவராது. ஆகவேதான் அவன் இச்சமயம் பொய் சொல்ல நேர்ந்தது]

சிங்: அருணா, அது யாரிடமிருந்து வந்திருக்கின்றது?

அரு: தந்தையே நான் சீக்கிரம் செல்லவேண்டும். ஓலை மந்திரியாரிடமிருந்து வந்திருக்கின்றது!

சிங்: செல்வமே, சென்று செயத்துடன் திரும்பு. நான் சொன்ன விஷயங்களை என்றும் மறவாதே.

அரு: சரி அப்பா. நான் வருகிறேன். வணக்கம்! [போகிறான்.]

## அங்கம்: 14

இடம்: ராஜகுருவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் மாடி வீடு.

[திலோத்தமாவும், அருணனும் சந்திக்கின்றனர். ராஜகுருவும், கருநாகனும் மாறுவேடத்துடன் வீட்டிற்கு வெளியே ஒளிந்து நிற்கின்றனர். அருணன் போனதை அவர்கள் கவனிக்காது பேச்சில் ஈடுபட்டிருக்கின்றனர்!]

அரு: வணக்கம்!

தி: வணக்கம்!

அரு: திலோத்தமா, எங்கே காஞ்சனா?

தி: என்ன அவ்வளவு அவசரம்? காஞ்சனா இல்லையென்றால் போய்விடுவீர்கள் போலிருக்கே?

அரு: (தயங்கி) ஹூம்..... அதற்கில்லை ஓலையிலுள்ளபடி நானிங்கு எதிர்பார்த்தது காஞ்சனாவைத்தான். மாறாக நீ இங்கு இருக்கவே திடுக்கிட்டுவிட்டேன் அவ்வளவுதான்!

தி: வீரரே, நான் உம்மிடம் ஓர் முக்கியமான விஷயத்தைப் பற்றிப்பேசவே ராஜகுமாரி எழுதியதுபோல் ஓர் ஓலையை எழுதி அனுப்பினேன்!

அரு: என்ன....ராஜகுமாரி எழுதியதுபோல் நீயா எழுதினாய்? ஏன்...எதற்காக, திலோத்தமா?

தி: வீரரே, நீர் அதிகநேரம் இங்கு தாமதிப்பது தவறு. ஆபத்துச் சூறாவளி இன்னும் சிறிது நேரத்தில் வீச ஆரம்பித்து விடும்!

அரு: திலோத்தமா நீ சொல்வதொன்றும் எனக்குப் புரியவில்லையே எதைப்பற்றி நீ குறிப்பிடுகின்றாய்?

தி: அருணரே, மந்திரியார் உம்மை அரசரின் கொலையைப் பற்றி ஆராய்ச்சிசெய்ய அமர்த்தி இருக்கின்றாரல்லவா?

அரு: அட...அது உனக்கெப்படித் தெரிந்தது?

தி: அது என் ஏற்பாடுதான்!

அரு: என்ன.......உன் ஏற்பாடா?

தி: ஆம். அருணரே, அரசரைக் கொன்ற கொலையாளி யாரென்று ஒருவாறு எனக்குத் தெரியும்.

அரு: ஹா.....உண்மையாகவா... யாரது?

தி: பதட்டம் வேண்டாம். கொலையாளி யாரென்று தெரிந்திருந்துங் கூட அதை மெய்ப்பிக்கப்போதுமான சாட்சி இன்னும் சிக்கவில்லை.

அரு: [ஆத்திரமுடன்] யார் அந்தக் காதகன்?

தி: அவன்தான் தற்போதைய சேனாதிபதி கருநாகன்!

அரு: என்ன...கருநாகனா? அந்தக் கோழையா இத்தகைய கொடிய செயல் புரிந்தது?

தி: அந்தக் கோழைதான் அரசனைக் கொன்றது. திட்டம் யார் தீட்டியது தெரியுமா? சொன்னால் நீர் மட்டுமல்ல... இந்தநாடே திடுக்கிட்டுப்போகும்!

அரு: அந்தத் துரோகி யார் திலோத்தமா?

தி: துரோகியல்ல....துரோகிகள்!

அரு: என்ன...ஒருவருக்கு மேற்பட்டவரா?

தி: ஆம் அவர்கள்தான்... என் தந்தை ஆலவாயரும், மகாராணி காஞ்சனா தேவியாரும்

அரு; என்ன...மகாராணியுமா? நீ சொல்வது......

தி: அப்பழுக்கற்ற உண்மை இது கனவுமல்ல—சித்தப் பிரமையால் சொல்லும் வார்த்தைகளுமல்ல. நான் சொன்னவை அத்தனையும் எழுத்துக்கு எழுத்து உண்மை!

அரு: என்னால் நம்பவே முடியவில்லையே!........மகாராணி எப்படி......

தி: இந்த விஷயத்தில் கலந்தார்கள் என்று தானே கேட்கின்றீர்கள். வீரரே, மகாராணியைப் பற்றியும், என் தந்தை ஆலவாயரைப் பற்றியும், கருநாகனைப் பற்றியும் முழுவிவரமும் அறிந்தால் இன்னும எவ்வளவு வேதனை கலந்த வேடிக்கையாய் இருக்குமென்பதை எண்ணிப்பாரும். அது போகட்டும், அருணரே, நான் சொன்னபடி நீர் மாறு வேடமுடன் நாளைக்கு அரண்மனையில் வந்து மந்திரியாரைக் காணவேண்டுமென்று காவலாளிகளிடம் சொல்லுங்கள். உங்களது பெயரை தயாளன் என்று குறிப்பிடுங்கள். அதுதான் குறிப்புவார்த்தை. நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களது புதுப் பெயர் தயாளன்!

அரு: தயாளன்,...தயாளன் ...நினைவிலிருக்கின்றது. பிறகு....

அரு: பிறகு மந்திரியார் உன்னை ஓர் போர் வீரனாக நியமித்துக் கருநாகனுக்கு உதவியாளாக நியமிப்பார். நீர் அவனுடன் இருந்துகொண்டு எப்படியாவது அரசரைக் கொலை செய்ய விஷம்தந்த வைத்தியன் யாரென்றும், அவன் பெயர்....ஊர்......எங்கிருக்கின்றான் என்பதை எல்லாம் அறியவேண்டும். அப்போதைக்கப்போது அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளைத் தவிடு பொடியாக்க வேண்டும். பின்னால் ஆகவேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன். (தொடரும்)


# பாரதி கலைக்கோயில்

(தபால் மூலம் கல்வி)

B. A. M. A. தமிழ்ப் புலவர்கள் ஆகியோரின் அரிய தயாரிப்பு! 1 1952 தமிழ் புகுமுகத் தேர்வு 2 E.S. L.C. (விரும்புவோர்க்கு ஆங்கிலமும் உண்டு) இவற்றிற்குத் தபால் பாடங்கள் அச்சிட்டு இலவசமாகப் போதிக்கப்படுகிறது. விவரமறிய 2 அணா தபால் தலைகளுடன் 26-2-51-க்குள் விண்ணப்பிக்கவும். முகவரி:—தலைவர், பாரதி கலைக் கோயில், ரிஷிவந்தியம், P. O. (via) திருக்கோயிலூர்.

S. I. Ry.


Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar Free Printers 147, Coral Merchant St., Madras. Joint-Editor, M. Ilancheliyan B. A.(Hon)